வாராந்த மின்னிதழ்
உண்மையின் முகம்
கல்முனை NET
kalmunainet.com
e paper






தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
சார்வரி வருடம் மாசி 16 (27.02.2021) இதழ் : 07

# ஜெனீவாவில் இம்முறை தமிழருக்கு நல்லதொரு சாதகதீர்வு கிடைக்கும்!

## இந்தியா நடுநிலை வகிக்கும் சாத்தியம்!



### த.தே.கூட்டமைப்பின் பேச்சாளர் சட்டத்தரணி சுமந்திரன் தெரிவிப்பு

(வேதசகா)

வழமைக்குமாறாக இந்தமுறை ஜெனீவா அமர்வு விசேசமானது. எமது நியாயமான பிரச்சனைகளுக்கு தீர்வுகிடைக்குமென நம்பலாம்.அத்தகையதொரு சூழ்நிலை அங்கு நிலவுகிறது.எனவே இறுதியில் நல்லமுடிவு கிடைக்கும் என்று த.தே.கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.எ.சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: இன்றைய ஆட்சியாளர்களின் மனநிலையில் எவ்விதமான அதிகாரத்தையும் பகிர்வதில்லை என்றபோக்கு

02

## கல்முனை மக்கள் வங்கியிலும் கொரோனா மூடப்பட்டது கிளை

(நமது நிருபர்)

கல்முனை மக்கள்வங்கிக்கிளையில் பணியாற்றும் முகாமையாளர் உள்ளிட்ட ஐந்து ஊழியர்களுக்கு

02

## சிங்கள அடக்குமுறைக்கு ஜனாசாவிவகாரம் சிறந்ததொரு பாடமாக இருக்கவேண்டும்

### மூத்த முஸ்லிம் அரசியல் பிரமுகர் ஹசன்அலி கூறுகிறார்

(வேதசகா)

ஜனாசா விவகாரம் சிங்கள அடக்குமுறைக்கு இது ஒரு சிறந்த பாடமாக இருக்கவேண்டும். கரண்டியால் எடுக்கவேண்டியதை சம்மட்டிகொண்டுஎடுத்ததாக இதனைப் பார்க்கிறேன் என்று மூத்த முஸ்லிம் அரசியல் பிரமுகரும் ஐக்கிய சமாதான

02



## மட்டு .மயிலத்தமடு விவசாயிகள் நாளை வெளியேற வேண்டும்!

### என்கிறார் மட்டு.மாவட்ட எம்.பி ஜனா.

(வேதசகா)

மட்டு.மாவட்ட மயிலத்தமடு மாதவனைமேய்ச்சல்தரைஅபகரிப்புதொடர்பான கொழும்பு மேல்நீதிமன்ற வழக்கின்படி நாளை(28) ஞாயிற்றுக்கிழமை அங்கு அத்துமீறி

02



### விரைவில் நல்லது நடக்கும்:

## அம்பாறை தமிழர் பிரச்சினை பற்றி பிரதமருடன் பேச ஏற்பாடு!

### மக்கள் தயாராகவேண்டும் என்கிறார் கருணா அம்மான்

(வேதசகா)

இனி நல்லது நடக்கும் என நினைக்கிறேன். எதிர்வரும் சித்திரைமாதம் முதல் அம்பாறை மாவட்ட தமழர் பிரச்சினை தொடர்பில் துறைசார்ந்து கொழும்புக்குச்சென்று பிரதமரைச்சந்திக்கும் திட்டமுள்ளது.அதற்கு நீங்கள் தயாராகவேண்டும்.

இவ்வாறு பிரதமரின் மட்டு. அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் முன்னாள் பிரதி

02




## இதுவரை இலங்கைக்கு ஆதரவாக 21 எதிராக 15

நமதுநிருபர்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இதுவரையான உரைகளின் அடிப்படையில் 21 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகவும் 15 நாடுகள் எதிராகவும் பேசியதாக தெரிவிக்கப்படுகின்றது.

02



## பச்லெட்டின் நச்சென்ற குற்றச்சாட்டு



( நமது நிருபர்)

உள்நாட்டு யுத்தம் முடிந்த சுமார் 12 ஆண்டுகள் கடந்த பிறகும் கூட பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பது உறுதிப்படுத்தப்படவில்லை என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மீஷெல் பச்சலெட்

02




## தேசிய கல்வி நிறுவகத்தில் இணையவாய்ப்பு

( நமது நிருபர்)

2023 ஆம் ஆண்டிற்கான கலைத்திட்ட தயாரிப்பில் மொடியுல் எழுதுவதற்காக தகுதி

02

## தமிழ் நாட்டில் ஏப்ரல் 6 ஆம் திகதி ஒரே கட்டமாக தேர்தல்

தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, மேற்கு வங்காளம், அசாம் ஆகிய ஐந்து மாநிலங்களில் மே மாதம் 23ந்தேதிக்குள் தேர்தல் நடத்தி முடிக்க வேண்டும் இதற்கமைய தேர்தல் ஏப்ரல் ஆறாம் திகதி நடைபெறும் என இந்திய தலைமை தேர்தல் ஆணையர் சுனில் அரோரா அறிவித்தார்.

02

## வெளியில் செல்லும்போது முகக்கவசம் அணிந்து செல்வோம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய கல்வி நிறுவகத்தில் இணையவாய்ப்பு...

வாய்ந்த ஆசிரியர்களை தற்காலிக அடிப்படையில் தேசிய கல்வி நிறுவகத்தின் அனைத்து பாடத்துறைகளுக்கும் இணைத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக தேசிய கல்வி நிறுவகத்தின்உதவி விரிவுரையாளர்களுக்கு வழங்ப்படும் சம்பளத்தின் 25வீதம் கொடுப்பனவாக வழங்கப்படும்.

இவர்களுக்கு ஆசிரியர்களுக்கான சம்பளமும் மேற்குறிப்பிடப்பட்ட கொடுப்பனவும் வழங்கப்படுவதோடு ஏனைய சில குறிப்பிட்ட வேறு கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

தேசிய கல்வி நிறுவகத்தின் நிரந்தர விரிவுரையாளர்கள் உள்வாங்கப்படும் இடத்து இவர்களின் தற்காலிக இணைப்பானது விசேட கவனத்தில் கொள்ளப்படும். தேசிய கல்வி நிறுவகத்திற்கு இணைத்துக் கொள்வதற்கான குறைந்தபட்சதகைமையானது குறிப்பிட்ட பாடத்தில் பட்டதாரியாகவும் பட்ட மேற்கல்வி டிப்ளோமாவும் குறைந்தது ஆறு வருட ஆசிரிய அனுபவமும் முக்கியமானதாகும். தகைமை மற்றும் விருப்பம் உடையோர் தங்களால் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவை ஒன்றை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## விரைவில் நல்லது நடக்கும்: அம்பாறை தமிழர் ...

அமைச்சருமான கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் காரைதீவில்தெரிவித்தார்.

இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளின்பேரில் பிரதமமந்திரி மஹிந்தராஜபக்ச தைப்பொங்கலைமுன்னிட்டு நாட்டிலுள்ள 100ஆலயங்களுக்கு நிதியுதவி வழங்கிவருகின்ற வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் 06ஆலயங்களுக்கு காசோலை வழங்குகின்ற நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வு நேற்று (26) வெள்ளிக்கிழமை காரைதீவு பிரதேசசெயலாளர் சிவ.ஜெகராஜன் தலைமையில் காரைதீவுபிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் அம்பாறைமாவட்ட மேலதிக அரசஅதிபர் வே.ஜெகதீசன் கௌரவஅதிதியாகக்கலந்துகொண்டுரையாயற்றினார். அங்கு இணைப்பாளர் வி.முரளிதரன் மேலும் பேசுகையில்:

தேர்தல் முடிந்த கையோடு அம்மானைக்காணவில்லை என பலர் விரக்தியிலிருந்ததுண்டு. ஒன்றுமே செய்யவில்லை என்றும் கூறினார்கள். உண்மை அரசாங்கம் இப்போதுதான் நிலையானகட்டத்திற்குவந்துள்ளது. இனி நாம் நிறைய வேகைளை முடிக்கலாம். கொழும்பிற்குச்சென்று பல அமைச்சர்களையும் சந்தித்துவருகிறேன். விரைவில் நல்லவை நடக்கும்.

மதப்பற்றுள்ளவர் பிரதமர். குறிப்பாக இந்துசமயத்தில் மிகுந்த பக்தி அவரிடமுள்ளது. ஜனாதிபதியும் சாதகமாக உள்ளார். எனவே நாம் சந்தர்ப்பத்தை பயன்படுத்த நாம் ஒத்துழைப்புவழங்கவேண்டும்.

எதிர்வரும் சித்திரைமாதம் முதல் துறைசார்ந்து, கொழும்புக்குச்சென்று பிரதமரைச்சந்திக்கும் திட்டமுள்ளது.அதற்கு நீங்கள் தயாராகவேண்டும்.

கல்முனை வடக்கு பிரதேசசெயலகம் தரமுயர்த்தல் தொடர்பாக அமைச்சர்சமல்ராஜபக்சவிடம் பேசியுள்ளேன். விரைவில் நல்லபதிலைஎதிர்பார்க்கலாம்.

காரைதீவு, திருக்கோவில் வைத்தியசாலைகளைதரமுயர்த்தி அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தம்பட்டையில் 500குடும்பங்களுக்கான பனம்பொருள்உற்பத்தி கைத்தொழிலை மேம்படுத்த நிலையத்தை ஆரம்பிக்கவுள்ளேன்.

பொத்துவில் 60ஆம் கட்டைப்பிரச்சினை நிறைவுக்கு வந்துள்ளது. அதிலே முயற்சி செய்து 182குடும்பங்களுக்கு காணியை வழங்க 14நாள் அறிவித்தல் போடப்பட்டுள்ளது. ஆகவே அப்பிரச்சினையைத் தீர்த்ததில் மகிழ்ச்சி.

30வருடங்களாக செய்ய முடியாமலுள்ள வளத்தாப்பிட்டிக்கு அப்பால், எம்மவரின் காணிகளை மீட்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காரைதீவு வலயம் தொடர்பாகவும் ஜி.எல்.பீரிசிடம் பேசியுள்ளேன்.

எதற்கும் மக்கள் ஒற்றுமையாக எம்மோடு இணைந்திருங்கள். இனி நல்லகாலம்தான்.

பி2பி பேரணி தேவைக்கில்லாத ஒன்று. வீண்வேலை. அரசாங்கம் தமிழ்மக்களுக்கு உதவஇருக்கின்றகாலகட்டத்தில் இவையெல்லாம் தேவையா? இதைவிட கதிர்காம பாதயாத்திரையில் செல்லலாம்.

அன்றுதொட்டு தமிழர்களுக்கு என அடையாளமாக இருக்கின்ற ஒரேயொரு செராத்து ஆலயம் ஆகும். அந்த ஆலயங்கள் தேவையான ஆவணங்களுடன் பதிவுசெய்யப்பட்டிருக்கவேண்டியது அவசியமாகும்.

இவைகள் இல்லாதகாரணத்தினால் பல ஆலயங்கள் நீதிமன்றில் காலத்தைக்கடத்துகின்றன. முதலில் நாம் ஒற்றுமைப்படவேண்டும். வழக்குகளுக்கு போகக்கூடாது. இருப்பைப்பாதுகாக்கவேண்டும்.

ஆலயங்கள் தேவையற்ற செலவுகளைத்தவிர்த்து கல்விக்காக செலவிடவேண்டும். அறநெறிவகுப்புகளை ஆரம்பிக்கவேண்டும்.என்றார்.

இந்துசமயகலாசார திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட உத்தியோகத்தர் கு.ஜெயராஜி வரவேற்புரை நிகழ்த்த கலாசார உத்தியோகத்தர் என்.பிரதாப் நிகழ்ச்சியை நெறிப்படுத்தினார்.

இறுதியில் 06ஆலயங்களின் நிருவாகத்தினருக்கு காசோலைகள் வழங்கப்பட்டன.

## மட்டு .மயிலத்தமடு விவசாயிகள் நாளை...

விவசாயம்செய்த பெரும்பான்மையினத்தவர் வெளியேற வேண்டும். இதனை சட்டமாஅதிபர் திணைக்கள அரசசட்டத்தரணி உறுதிப்படுத்தவேண்டும்.

இவ்வாறு மட்டு.மாவட்ட மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல்தரை அபகரிப்பு தொடர்பாக வழக்குதாக்கல் செய்து வழக்கைமுன்னெடுத்துவருபவர்களில் ஒருவரான த.தே.கூட்டமைப்பின் மட்டு.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

வழக்கு விசாரணை எதிர்வரும் மே 12வரை ஒத்திவைக்கப்பட்ட நிலையில் கடந்த 23ஆம் திகதி கொழும்பு மேல்நீதிமன்றில் என்ன நடந்தது என்று கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த சேனைபயிர்ச்செய்கையாளர்களுக்கு தற்காலிக அனுமதியை மகாவலிஅதிகாரசபை வழங்கியிருந்தது. அவ் அனுமதி நாளை 28ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருவதால் அவர்கள் நாளை வெளியேறுவார்கள் என அரசசட்டத்தரணி மன்றில் தெரிவித்ததாக தமது சட்டத்தரணி எம்.ஏசுமந்திரன் எம்மிடம் கூறினார்.

நீண்டகாமாக பாற்பண்ணையாளர்கள் தமது 1லட்சத்துக்கு மேற்பட்ட கால்நடைகளை மேய்த்துவரும்போது அங்கு 617 பெரும்பான்மையினத்தவர் அண்மையில் சேனைப்பயிர்ச்செய்கைக்காக புதிதாக வந்து ஆக்கிரமித்தனர். இதனையடுத்து அவர்களை அகற்றுமாறுகோரி வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே.

**ஆசிரியர் பக்க தொடர்ச்சி...**

## புதிய அரசியலமைப்பும் கிடப்பில்..

பதவியில் இருந்த ஒவ்வொரு அரசாங்கமும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் புதிய அரசியலமைப்பை உருவாக்கும் முயற்சியில் இறங்கினாலும், அவ்வப்போது இருந்த எதிர்க் கட்சிகளாலும் பேரினவாதிகளாலும் குழப்பியடிக்கப்பட்டன.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையார் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது. அதிகாரப் பரவல் நோக்கத்துடன் கூடிய அரசியலமைப்பு நகல் சட்ட வரைவாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது, அப்போதைய எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அதனை எதிர்த்தது மட்டுமல்ல, பாராளுமன்ற சபா மண்டபத்தின் உள்ளேயே தீயிட்டுக் கொளுத்தியது. அப்போது, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்க அதன் பின்னணியில் இருந்தாரென ஆளும் தரப்பு குற்றம்சாட்டியது.

எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க,முன் ஆசனத்தில் இருக்கும்போதே அவரது கட்சியைச் சேர்ந்த பின்னாலுள்ள ஐதேக எம்பிக்களே இதனை செய்தனர். இதனைத் தொடர்ந்து அந்த அரசியல் யாப்பு நகல் கிடப்பில் போடப்பட்டது.

இதேபோல,நல்லாட்சி அரசின் புதிய அரசியலமைப்பை உருவாக்க குழுக்களை நியமித்ததோடு பாராளுமன்றமும் அரசியலமைப்பு சபையாக மாற்றப்பட்டது. அப்போதைய எதிர்க் கட்சியாக இருந்த இன்றைய ஆளும் தரப்பு,அதற்கு,ஒத்துழைப்பு வழங்க மறுத்தது.ஆனாலும், நல்லாட்சியின் பதவிக்காலம் முடிவடைந்த நிலையில் அதுவும் கிடப்பில் போடப்பட்டது.

ஏட்டிக்குப் போட்டியான இந்த அரசியலால், புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவது எட்டாக்கனியாகவே இதுவரை முடிந்திருக்கிறது.

என்றாலும், மூன்றிலிரண்டு பெரும்பான்மை உள்ள தனிப்பெரும் அரசு,புதிய அரசியலமைப்பை உருவாக்க முயல்கிறது.அதில் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையும் தெரிகிறது. அறுதிப் பெரும்பான்மை இருக்கின்றது என்பதற்காக, எழுந்தமானமாக செயல்படாமல், தமிழ் பேசும் மக்களின் யோசனைகளையும் உள்வாங்கி செயல்பட்டால் நாடு சுபிட்சம் பெறும்.

## சர்வதேச விண்வெளி நிலையத்தின் செயற்திட்டத்தில் பங்கேற்கிறது மட்டக்களப்பு Dream Space Academy



**நமதுநிருபர்**

DreamSpace Academy இலங்கையின் மட்டக்களப்பை மையமாகக் கொண்ட ஒரு சமூக புத்தாக்க நிலையம். (Community Innovation Center) சர்வதேச விண்வெளி நிலையத்தின் (International Space Station) ஒரு செயற்திட்டத்தில் பங்கேற்கிறது. இதில் இலங்கை இளைஞர்கள் 18 முதல் 23 வயதுக்குட்பட்டோர் பங்கேற்பது இதுவே முதல்முறையாகும்.

DreamSpace Academy இலங்கையில் வசதி குறைந்த இளைஞர் யுவதிகளுக்கு விண்வெளி ஆய்வகம் (Space Lab) உள்ளிட்ட மேம்பட்ட ஆய்வகங்களுக்கு (Advanced Multidiciplinary Labs) நிபந்தனையற்ற அணுகலுடன் திறன் வலுவூட்டல் செய்கின்ற ஒரு ஸ்தாபனமாகும்.

ரெட் கிலோவ்வின் (Red Clove) விதைகள் மற்றும் நைட்ரஜன் உருவாக்கும் பாக்டீரியாக்களுடன் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு ஒரு தன்னிறைவான எக்ஸோலாப்பை (ExoLab)

09 ஆம் பக்கத்தில்...

## பச்லெட்டின் நச்சென்ற குற்றச்சாட்டு...

குறிப்பிட்டிருப்பது ஸ்ரீலங்கா தரப்பிற்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

ஐக்கிய நாடுகளின் சபையின் மனிதவுரிமைகள் ஆணையகத்தின் 46ஆவது கூட்டத் தொடர் தற்போது ஆரம்பித்துள்ளதுடன் ஸ்ரீலங்கா தொடர்பில் காரசாரமான அறிக்கைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதற்கிடையில் தனது நட்பு நாடுகளை துணைக்கு அழைத்திருக்கிறது இலங்கை. கடும் நெருக்கடிகளை சமாளிக்கும் உத்தியில் ஸ்ரீலங்கா ஈடுபட்டிருக்கிறது.

## இதுவரை இலங்கைக்கு ஆதரவாக 21...

பிரித்தானியா நோர்வே கனடாயுனைடெட் ஸ்டேட்ஸ் ஜெர்மனிஐரோப்பிய யூனியன் போன்ற நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை எதிர்த்துப் பேசினர்.

இருப்பினும் இந்தியாவும் ஜப்பானும் நடுநிலைகளை வகித்தன.

மேற்கத்திய உலகின் நட்பு நாடாக இருந்தபோதிலும் ஆஸ்திரேலியா மிதமான தொனியில் பேசியது. இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஆதரித்து பேசிய 21 நாடுகளில் பத்து நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளாகும். .

ரஷ்யா சீனா பாகிஸ்தான் ஈரான் வியட்நாம் மாலைதீவு கியூபா நிகரகுவா எரிட்ரியா நேபாளம் கம்போடியா லாவோஸ் அஜர்பைஜான் பெலாரஸ் வட கொரியா காபோன் பிலிப்பைன்ஸ் சிரியா மற்றும்எகிப்து ஆகும்.

## கல்முனை மக்கள் வங்கியிலும் கொரோனா...

கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து கல்முனை மாநகரிலுள்ள பிரதான கிளை மூடப்பட்டுள்ளது. தொடர்ந்து 14நாட்கள் இது மூடப்பட்டிருக்கும். வாடிக்கையாளர்கள் அருகிலுள்ளகிளைகளுக்குச்சென்று தமது கருமங்களை நிறைவேற்றிக்கொள்ளுமாறு முகாமையாளர் அறிவித்தல் விடுத்திருக்கிறார். அம்பாறை கரையோரத்தில் கொரோனா காரணமாக மூடப்படும் 3வது மக்கள்வங்கிக்கிளை இதுவாகும்.

இதேவேளை சாய்ந்தமருது மக்கள் வங்கிக்கிளையில் பணியாற்றும் முகாமையாளர் உள்ளிட்ட ஐந்து ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டதையடுத்து சாய்ந்தமருதுக்கிளை கடந்தவாரம் மூடப்பட்டது தெரிந்ததே.

இதுஇவ்வாறிருக்க கொரோனாத்தொற்று காரணமாக 14நாட்கள் மூடப்பட்டிருந்த காரைதீவு மக்கள் வங்கிக்கிளை மீண்டும் கடந்த செவ்வாயன்று திறக்கப்பட்டது.

## சிங்கள அடக்குமுறைக்கு ஜனாசா விவகாரம்...

கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.ரி. ஹசன் அலி தெரிவித்தார்.

ஜனாசா நல்லடக்கம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்துள்ளதே இதுதொடர்பாக என்ன சொல்கிறீர்கள் என கேட்டபோது அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார். அவர் மேலும் கூறுகையில்:

ஜனாசாஅடக்கம் தொடர்பாக அரசாங்கம் காலந்தாழ்த்தியாவது சாதகமான முடிவைத்தந்துள்ளது. மகிழ்ச்சி. இதற்காக பின்புலத்தில் நின்றுழைத்து சர்வதேசத்திற்கு எட்டச்செய்த சகலருக்கும் அமைப்புகளுக்கும் எமது கட்சிசார்பில் நன்றிகள்.

உலக இஸ்லாமியபேரவை (O.I.C) பொத்துவில்பொலிகண்டி (P2P) பேரணி எல்லாம் இந்தமுடிவுக்கு அணிசேர்த்தன எனலாம். பாராளுமன்றில் காத்திரமான குரலெழுப்பிய தமிழ் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் நன்றிகள்.

(இவரது பூரண நேர்காணலை பக்கம் 07இல் காணலாம்)

## ஜெனீவாவில் இம்முறை தமிழருக்கு...

காணப்படுகிறது.அதாவது அதிகாரப்பகிர்வுக்கு தாம் தயாரில்லை என்ற மனநிலையிலுள்ளனர். இலங்கை அரசியலமைப்பிலுள்ள 13வது திருத்தத்தை முறையாக அமுல்படுத்தாத இலங்கைஅரசு அதனை கொணர்ந்த இந்தியாவிடம் பிரேரணையை எதிர்க்குமாறு கோருவது வியப்புக்குரியது.

இந்தியாவின் அயல்நாட்டுக்கான பொதுக்கொள்கையின் படி அது பெரும்பாலும் நாடுகளைக்குறிவைக்கும் பிரேரணைக்கு ஆதரவாகவோ எதிராகவோ இல்லாமல் நடுநிலை வகிக்கக்கூடியதன்மையே காணப்படுகிறது. ஏனெனில் நாளை தனது நாட்டிற்குள் அப்படிப்பட்ட பிரச்சினை எழுகின்றபோது சிக்கலை எதிர்நோக்கவேண்டிவரும் என்பதை இந்தியா அறியும்.

எனினும் இலங்கைத்தமிழ் மக்களது நியாயமான நீதியான பிரச்சினைகள் இவ்வரைவில் இருப்பதால் தமிழ்நாடு மற்றும் இந்திய தமிழ்மக்கள் எதிர்பார்ப்போடு இருப்பார்கள் என்பதால் வாக்களிப்பதற்கு மாறாக காத்திரமான உரையாடல்களை கருத்துக்களை சொல்லக்கூடும்.

ஆரம்பவரைவில் குறிப்பிடப்பட்ட சாட்சியங்களைப் பாதுகாத்து விசாரணை நடாத்துவது என்ற பொறிமுறை சிரியாவில் றிப்பிள்ஜ (I.I.I.) போன்று மியன்மாரில் டபிள்ஜஏ (I.I.A) போன்று நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என எதிர்பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
பிரதானவீதி பாண்டிருப்பு, கல்முனை
T.P.:0776965343, 0762933026, 0773457915
E.Mail: kalmunainet@gmail.com, ceditorsaga@gmail.com
சிந்தனைக்கு விருந்து

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது

# புதிய அரசியலமைப்பும் கிடப்பில் போடப்படுமா?

**புதிய** அரசியலமைப்பை உருவாக்கும் பணிகள் சூடுபிடித்து இருக்கின்றன. தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைய அரசாங்கம் துரித செயல்பாடுகளில் இறங்கியுள்ளது. இப்படித்தான் காலத்துக்குக் காலம் அரசியல் அமைப்பு என்பார்கள் ; அரசியல் தீர்வு என்பார்கள் ;தேர்தல் முறைமையை மாற்ற போகும் என்பார்கள், பதவிக்காலம் முடியும் தறுவாய் வந்ததும் தேர்தலுக்குப் பிறகு பார்ப்போம் என்பார்கள். இவைகள் நம் நாட்டில் தொடரும் வரலாறு.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியிலிருக்கும் இந்த அரசாங்கம் அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றி மேலும் தன்னை பலப்படுத்திக் கொண்டுள்ளது. இந்த நிலையில், புதிய அரசியலமைப்பை உருவாக்கும் முயற்சியில் முனைப்பு காட்டும் அரசாங்கம், 9 பேர் கொண்ட நிபுணர் குழுவை நியமித்திருக்கிறது. நாட்டின் பிரபல சட்ட வல்லுனர் ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா இந்த குழுவின் தலைவராக செயல்படுகிறார். கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் செயல்படும் இந்த குழுவின் அலுவலகம் இப்போது மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறது. பொதுமக்களிடமிருந்து எழுத்து மூலம் கருத்துக்கள் கோரப்பட்டிருக்கின்றன. அதேநேரம், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளும் தங்களது யோசனைகளை சமர்ப்பிக்க தொடங்கியிருக்கின்றன.

ஒரு ஜனநாயக வழிமுறையில் இது ஒரு ஆரோக்கியமான முன்னெடுப்பு. கருத்துக்களையும் யோசனைகளையும் முன்வைக்கும் உரிமை சகலருக்கும் இருக்கிறது. ஆனால்,எல்லா யோசனைகளும் புதிய அரசியலமைப்புக்குள் உள்வாங்கப் படுவது என்பது சாத்தியமில்லை. என்றாலும், சுமார் 70 ஆண்டு காலம் புரையோடிப் போயிருக்கின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில்,யோசனைகள் உள் வாங்கப்படுவது நாட்டின் எதிர்காலத்திற்கு ஒளி ஏற்றும்.

அரசியலமைப்பு என்பது ஒரு நாட்டின் நிர்வாகத்தை வழிமுறைப்படுத்தி சீரிய முறையில் கொண்டு செல்வதற்கான அடிப்படை சட்டமாகும். உண்மையில், ஒரு நாட்டின் அச்சாணி என்று கூட இதனைச் சொல்ல முடியும். கால மாற்றங்களிலும் வளர்ச்சி கட்டங்களிலும் தன்னை இசைந்து கொடுக்க கூடியதாக இது இருக்குமாக இருந்தால், நாட்டில் பிரச்சினைகளும் சலசலப்புகளும் ஏற்படுவதற்கு வாய்ப்பே இருக்காது.

அரசியலமைப்பு சட்டம் சரியாக வடிவமைக்கப்பட்ட பல நாடுகள் இன்று நிம்மதியாக சுவாசிக்கின்றன. அத்தகைய நாடுகள் அமைதிப் பூங்காவாக உலகில் திகழ்வதற்கு உறுதியான அரசியல் அமைப்புத்தான் காரணமாக இருக்கின்றது.

அரசாங்கத்தின் உத்தேச புதிய அரசியலமைப்புக்கு கட்சிகள் முன்வைத்திருக்கும் யோசனைகள் சற்று வித்தியாசமாகத்தான் இருக்கின்றன. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் உதய கம்மன்பில தலைமையிலான 'பிவித்துரு ஹெல உறுமய' என்ற கட்சி அதன் யோசனையை முன் வைத்திருக்கிறது. இந்தக் கட்சி தென்பகுதி சிங்கள மக்களை மையமாகக் கொண்டு மட்டும் பல்வேறு கருத்துக்களை முன்வைத்து இருந்தாலும், 4 விடயங்களை முதன்மைப்படுத்தி இருக்கிறது. இலங்கையின் பெயரை மாற்ற வேண்டும் ; ஒற்றையாட்சியின் கீழ் தான் அதிகாரப் பகிர்வு ; ஜனாதிபதி தேர்தல் முறையை முற்றாக ஒழித்தல் வேண்டும் ; இரட்டை குடியுரிமையை நீக்க வேண்டும். இவை நான்குமே பிவித்துரு ஹெல உறுமயவின் முக்கிய யோசனைகளாக இருக்கின்றன.

இதேபோல, தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது வழமையான நிலைப்பாட்டை யோசனையாக சமர்ப்பித்துள்ளது. பல்லின சமூகம் வாழும் நாட்டில் சமஷ்டி முறையிலான தீர்வு அவசியம் என வலியுறுத்தியுள்ள தமிழ் கூட்டமைப்பு, வடக்கு,கிழக்கு பிரதேசங்களை தமிழர்களின் தாயகம் என ஏற்று, தமிழர்களுக்கு உள்ளக சுயநிர்ணய உரிமை வழங்க வேண்டும்.தவறினால், வெளியக சுயநிர்ணய உரிமை கோரும் நிலைக்கு தமிழர்கள் தள்ளப்படுவார்கள் என தமிழ் கூட்டமைப்பு தனது யோசனையில் சுட்டிக் காட்டியுள்ளது.

மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இராதாகிருஷ்ணன் தலைமையிலான 'மலையக மக்கள் முன்னணி' தனது யோசனையை மலையக மக்களை மையமாகக் கொண்டு முன்வைத்திருக்கிறது. இதற்கமைய, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை தொடர வேண்டும்.ஆனாலும், மூன்று இனங்களை பிரதிநிதித்துவப் படுத்தி உப ஜனாதிபதிகளை நியமிக்கும் முறைமை உருவாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி இருக்கின்றது. வடக்கு,கிழக்குத் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தி ஒரு உப ஜனாதிபதியும், முஸ்லிம்களின் பிரதிநிதியாக ஒரு உப ஜனாதிபதியும் மலையக மக்களை பிரதிநிதித்துவம் படுத்தும் வகையில் இன்னும் ஒரு உப ஜனாதிபதியுமாக மூவரைநியமிக்கக் கோரும் இந்தக் கட்சி உப ஜனாதிபதிகள் மூவரும் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் கீழ் செயல்படுவார்கள் என தனது யோசனையை சமர்ப்பித்துள்ளது. இதேபோல, ஆளும் பொதுஜன பெரமுன கட்சியும் ஏனைய கட்சிகளும் இப்படியான பல்வேறு யோசனைகளை முன்வைக்க தான் போகின்றன.ஆனாலும்,9 பேர் கொண்ட இந்த நிபுணத்துவ குழு இத்தகைய யோசனைகளை எவ்வாறு உள்வாங்க போகின்றன என்பதில் தான் புதிய அரசியலமைப்பும் நாட்டின் எதிர்காலமும் தங்கியிருக்கின்றது. அதிகாரப்பகிர்வு, 13வது திருத்தம், காணி அதிகாரங்கள் தொடர்பில் நிபுணத்துவ குழு கூடுதல் ஆர்வம் கொண்டிருப்பது போல் தெரிகிறது. இதுவரை யோசனைகளை சமர்ப்பித்த கட்சிகளை சந்தித்த இந்த குழு, மேற்படி மூன்று விடயங்கள் தொடர்பில் துருவித் துருவி கேள்வி எழுப்பி உள்ளதாக தெரியவருகிறது.

தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம் 70 ஆண்டுகளாக தொடர்கின்றன.பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டில் சகல மக்களையும் அரவணைத்து செல்லும் அரசியலமைப்பு இல்லாமையே அடிப்படை காரணமாக பார்க்கப்படுகின்றது.

இதுவரை இரண்டு குடியரசு யாப்புக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. என்றாலும்,

பூர்வீக குடிகளாக இருக்கின்ற தமிழர்களின் எவ்வித பங்களிப்புகளும் இல்லாத நிலையிலேயே நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கின்றன. அதாவது,தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமை மறுக்கப்பட்ட நிலையிலேயே இரண்டு யாப்புகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

மிகுதி 02 ஆம் பக்கத்தில்...

# உறுப்புரிமைநாடுகள் எமக்கெதிரான பிரேரணையை நிராகரிக்கவேண்டும்

## அமைச்சர் தினேஸ்




**ஐக்கியநாடுகள்** மனித உரிமை பேரவை செவிவழி தகவல்கள் ஒருதலைப்பட்ச நடவடிக்கைகள் அல்லது ஒருகோணத்தை அடிப்படையாக கொண்ட விடயங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் செயற்படக்கூடாது என இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஸ்குணவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 46 ஆவது கூட்டத்தொடரின் 2 ஆவது நாளில்[23] வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டார்..

மனிதஉரிமை பேரவைஉடனான இலங்கையின் தொடர்ச்சியான ஈடுபாட்டை கருத்தில் கொண்டு இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நிராகரிப்பதன் மூலம் எங்களிற்கு ஆதரிக்குமாறு உறுப்புநாடுகளை கேட்டுக்கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவை உடனடி கவனத்தை செலுத்தக்கூடிய நிலைமை இலங்கையில் காணப்படுகின்றதா அல்லது இந்த பிரச்சாரம் அரசியல் நோக்கங்களை கொண்டதா என்பதை தீர்மானிக்கும் பொறுப்பை உறுப்புநாடுகளிடம் விட்டுவிடுவதாக தெரிவித்துள்ளார்

நவம்பர் 2019 இல் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவிற்கு மக்கள் வழங்கிய ஆணை ஜெனீவா தீர்மானத்தை இலங்கை மக்கள் நிராகரித்ததை தெளிவாக வெளிப்படுத்தியது.இந்த ஆணையை அடிப்படையாக வைத்து நான் இலங்கை இணை அனுசரணை வழங்கிய தீர்மானத்திலிருந்து வெளியேறும் என நான் அறிவித்தேன்.

2015 இல் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தீர்மானத்திற்கு இணை அனுசரனை வழங்கியது.இது எங்கள் நாட்டிற்கு எதிரானது.அந்த தீர்மானம் நிறைவேற்றமுடியாத பல விடயங்களை உள்ளடக்கியதாக காணப்பட்டது மேலும் அந்த தீர்மானங்கள் இலங்கையின் அரசமைப்பிற்கு முரணாணவையாக காணப்பட்டன.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளதுஅந்த அறிக்கையில் முன்னொருபோதும் இல்லாத பிரச்சார நடவடிக்கை என நிராகரித்துள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன சர்வதேச குற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுகளையும் நிராகரித்துள்ளார்..

மூன்று தசாப்தகால யுத்தத்தின் பின்னர் இலங்கையின் வீரமிக்க படையினர் விடுதலைப்புலிகளை செயல் இழக்கச்செய்தனர்.இலங்கை அரசாங்கம் நாட்டின் ஒருமைப்பாடு இறைமை ஆள்புல ஒருமைப்பாடு ஆகியவற்றை உலகின் மிகவும் ஈவிரக்கமற்ற பயங்கரவாத அமைப்பிடமிருந்து பாதுகாப்பதற்காக தற்பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டது

இலங்கை வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்கியதாக தெரிவிக்கப்படுவதை நிராகரிததுள்ள அமைச்சர் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை மனித உரிமை பேரவையின் உறுப்புநாடுகள் நிராகரிக்கவேண்டும் எனவும் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

# புதிய யாப்பில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகாரப்பகிர்வு வேண்டும்

## இரா.சம்பந்தன்



**புதிய** அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது வடக்கு கிழக்கினை பூர்வீகமாக கொண்ட தமிழ் மக்கள் உள்ளக சுயநிர்ணய உரிமையைக் கொண்டவர்கள் என்ற வகையில் ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவமாக வாழ்வதற்காக சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகாரப்பகிர்வு செய்யப்படுவதன் ஊடாகவே நீண்டகாலமாக புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வினை பெற்றுக்கொள்ள முடியும் என்று இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உத்தேச புதிய அரசியலமைப்பு உருவாக்கக்குழுவிடம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் தமது யோசனைகளைக் கையளித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மாவை.சோ.சேனாதிராஜா தருமலிங்கம் சித்தார்த்தன் ஊடகப் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இரா.சம்பந்தன் மேலும் கூறியதாவது;

தமிழர்களின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படாது அதிகாரங்கள் பகிரப்படாது உள்ளக சுயநிர்ணய உரிமை மறுதலிக்கப்பட்டு பெரும்பான்மையை மையப்படுத்தி பேரினவாதத்தினை தோற்றுவிக்கும் ஒற்றை ஆட்சிமுறை தொடர்ந்தால் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோரும் நிலைமைக்கு தமிழர்கள் தள்ளப்படுவார்கள். நாட்டின் தன்மையானது பிரிக்க முடியாத பிளவு படுத்த முடியாத வகையிலான ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையிலானதாக அமைய வேண்டும். சமஷ்டி என்பது பிரிவினை வாதம் அல்ல. இது உள்நாட்டு நீதிமன்றத் தீர்ப்புக்களிலேயே உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது.

மேலும் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை இருப்பதன் காரணமாக தம்மைத்தமே ஆளுவதற்கான உரித்தினையும் கொண்டிருக்கின்றனர். ஆகவே அவர்கள் அதற்குரிய தீர்மானங்களை எடுக்கும் வகையிலான அதிகாரப்பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

அவ்விதமான அதிகாரப்பகிர்வு வொன்று செய்யப்படுவதன் ஊடாகவே நீண்டகாலமாக விடுதலைக்காக போராடி வரும் இனக்குழுமத்தினது அபிலாஷைகளையும் முழுமையாக பூர்த்தி செய்ய முடியும் என தெரிவித்தார்.

**எம்.ஏ.சுமந்திரன்**

நாட்டின் தேசிய பிரச்சினைக்கான தீர்வைப் பொருத்தவரையில் பிளவுபடாத பிரிக்கப்பட முடியாத நாட்டிற்குள் தீர்வு காண்பதற்கு நாம் முழுமையாக ஒத்துழைப்பை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம் என பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

எம்மைப் பொறுத்தவரை அதிகாரங்களைப் பரவலாக்கும் முறை அர்த்தமுள்ளதாக அமையவேண்டும். அது குறித்து எமக்கும் சர்வதேச சமூகத்திற்கும் இலங்கை அரசாங்கம் பல முறை வாக்குறுதியளித்துள்ளது. அதற்கமைவாக செயற்பட்டால் இதற்கான தீர்வினை அடைந்துகொள்ள முடியும்.

தற்போதுகூட அரசியலமைப்பிற்கான 13 ஆவது திருத்தத்தில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் இவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஒரு முறையான அர்த்தமுள்ள செயன்முறை வகுக்கப்பட வேண்டும் என தெரிவித்தார்.

கல்முனைநெற் மின்னிதழ் ஆசிரியபீடம்
பிரதம ஆசிரியர்: வி.ரி.சகாதேவராஜா,
இணை ஆசிரியர்: பு.கேதீஸ், ஆலோசகர்: க.குணராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புவிநேசராசா கேதீஸ்





# கஞகொல்ல கிராமத்தின் குறைகள் களையப்படுமா?

விஞ்ஞான உலகம் இன்று அபார வளர்ச்சியுடன் பெரிய மாற்றங்களுடன் சுழன்றாலும் இன்றும் ஆங்காங்கே அடிப்படை தேவைகள் நிறைவேற்றப்படாமல் பல்வேறு கிராமங்கள் இருப்பது கவலை தரும் விடயமே.

இலங்கை திருநாட்டின் கிழக்கு மாகாணத்தின் பொத்துவில் பிரதேசசத்திலுள்ள கோமாரி கஞகொல்ல கிராம மக்களுக்கான மிகவும் அத்தியாவசியமான பல தேவைகள் நிறைவேற்றப்படாமலுள்ளன.

இது சுனாமி பேரவலத்தின் பின்னர் குடியேற்றப்பட்டது. இக் கிராமத்தில் 177 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் சேனைப்பயிர்ச்செய்கை காணப்படுகின்றது . மாரி காலங்களில் மட்டுமே தோட்டங்களும் கைகொடுக்கும். குடிப்பதற்கு 15 வருடங்களாக நீர் இல்லை. தங்கள் பயிர்செய்கைக்கு மட்டுமல்ல தங்களின் உயிருக்கும் யானைகளால் அச்சுறுத்தல் தொடர்கின்றது..

சீரான வீதிகள் இல்லை. பல குடும்பங்களுக்கு மலசல கூட வசதிகள் இல்லை. சீரான போக்குவரத்து இல்லை.. இத்தனை இன்னல்களுக்கு மத்தியிலும் மாணவர்கள் பல மைல் தொலைவில் உள்ள பாடசாலைகளுக்கே சென்று வருகின்றனர்..சாலம்பை பிள்ளையார் ஆலயமும் கிருஸ்த்தவ சபைகளும் இங்கு உள்ளன.

ஒரு கிராம சேவகர் பிரிவை உடைய இந்த சிறிய கிராமத்திற்கு மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக மாலை நேர வகுப்புக்களையு ஏற்பாடு செய்து தருமாறும் இங்குள்ள இந்த மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கும் கை கொடுக்குமாறும் இந்த புலம் பெயர் உறவுகளை வேண்டி நிற்கின்றனர்.



**போதகர் சங்கிலிபோல்:**

மிகவும் பின்தங்கிய கஞகொல்ல கிராமம் சுனாமிக்குப்பின் உருவானது. இங்கு 170குடும்பங்கள் வாழ்கின்றன.இங்கு ஒழுங்கான வீதியோ மலசலகூட வசதியோ முன்பள்ளியோ கல்விநிலையங்களோ வாழ்வாதாரவசதியோ இல்லை. இவற்றையும் செய்துதர எமது உறவுகள் முன்வரவேண்டும்.



**போதகர் ராஜதுரை இதயபாஸ்கர்:**

தூர இடங்களுக்கு பல்வேறு சிரமத்துடன் பாடசாலைக்கு சென்று வருகின்றனர். இப்பிரதேச மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்க ஏதாவது திட்டத்தை முன்வைத்துதவினால் பேருதவியாகவிருக்கும்.

அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய உரிய அதிகாரிகள் அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுத்து நிரந்தர தீர்வினை பெற்று தரவேண்டும் என்றும் இந்த மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர். உரியவர்கள் கவனிப்பார்களா?







**கிராமதலைவி தங்கராசா சிறிரஞ்சனா:**

கடந்த 15வருடங்களாக குடிதண்ணீர் இல்லாமல் எமது மக்கள் அலைந்துதிரிந்ததை எண்ணிப்பார்க்கிறேன். நிறைய கஸ்டபடுகின்றோம்.

# கல்முனை வரலாறு

## ஓர் அறிமுகம்




**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

**கல்முனை** வடக்கு உபபிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முஸ்லீம் தரப்பினர், கல்முனை முஸ்லீம்களின் தாயகம் கல்முனை




முஸ்லீம்களின் பூர்வீகசொத்து – கல்முனை தென்கிழக்கு அலகின் வாயில் முகவெற்றிலை என்ற சொல்லாடல்கள் மூலம் ஏதோ முன்பு முஸ்லீம்களுக்குச் சொந்தமானதாக இருந்த கல்முனையை இப்போது தமிழர்கள் ஆக்கிரமிக்கப்போகிறார்கள் என்பது போன்ற தோற்றப்பாட்டைத் திட்டமிட்டுக் கட்டியெழுப்ப முயல்கின்றனர்.

அதேபோன்று தேர்தல் அரசியலைக் குறிவைத்துச் செயல்படும் தமிழ் அரசியல் பிரமுகர்களும் கேள்விஞானத்தை மட்டும் வைத்துக்கொண்டு கல்முனை பற்றிப் பொருள் மயக்கம் தரும் அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் கல்முனையின் வரலாறு பற்றியதோர் அறிமுகத்தைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டிய தேவை இன்று எழுந்துள்ளது.

அப்போதைய ஆங்கில ஆட்சியின் நிருவாக முறையின் கீழ் அப்போதைய மட்டக்களப்பு மாவட்டம் தற்போதைய அம்பாறை மாவட்டத்தையும் உள்ளடக்கியதாக ஒரு தனி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் தனி மாவட்டமாக இருந்தது. வடக்கே வெருகல் ஆற்றிலிருந்து தெற்கே குமுக்கன் ஆறுவரை நீண்டிருந்ததே அப்போதைய மட்டக்களப்பு மாவட்டம். இம்மாவட்டம்'வன்னிமைகள்' என அழைக்கப்பட்ட ஒன்பது நிருவாகப் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இந் நிருவாகப் பிரதேசத்தின் தலைவர் வன்னி முதலியார் [Chieftain] என அழைக்கப்பட்டார். ஒவ்வொரு வன்னிமையும் 'உடையார் பிரிவு' அல்லது 'கோறளை' என அழைக்கப்பட்ட உபபிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இவ் உபபிரிவின் தலைவர்கள் 'உடையார்' அல்லது 'கோறளை' என அழைக்கப்பட்டனர். இவ் உடையார் பிரிவுகள் மேலும் 'குறிச்சிகள்' என அழைக்கப்பட்ட பொலிஸ் உபபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இப் பொலிஸ் உபபிரிவின் தலைவர்கள் 'ஆராய்ச்சி' அல்லது கம்முலாதானி' (Village Headman) என அழைக்கப்பட்டனர். ஒவ்வொரு குறிச்சிக்கும் பொறுப்பாகக் கிராமத்தலைவர்கள் பணியாற்றினர்.

கல்முனைக் கிராமமானது 'கரவாகு – நிந்தவூர்ப்பற்று' வன்னிமைக்குள் அடங்கியிருந்தது. அப்போதைய நிருவாக அலகான 'வன்னிமை'யைத் தற்போதைய 'பிரதேச செயலகப் பிரிவு' உடன் ஒப்பிடலாம். 'கரவாகு – நிந்தவூர்ப்பற்று' வன்னிமைக்கு அதன் இறுதிக் காலத்தில் [1932 – 1946] சுமார் பதினான்கு வருடங்கள் எம்.எஸ். காரியப்பர் 'முதலியார்' ஆகக் கடமையாற்றிய காலம் தவிர்ந்த அதற்கு முந்திய காலம் முழுவதும் தமிழர்களே இவ் வன்னிமைக்கு 'முதலியார்' ஆகப் பதவி வகித்துள்ளனர். கல்முனை ஒரு தனியான உடையார் பிரிவாக இருந்தது.

பின்பு இலங்கை அரசாங்கம் 'வன்னிமை' நிருவாக முறைமையைப் பிரதேச இறைவரி உத்தியோகத்தர் அல்லது பிரிவுக்காரியாதிகாரி – D.R.O [Divisional Revenue Officer] முறைமைக்கு 1946 இல் மாற்றியமைத்தது.

முன்பு நூறு வீதம் தமிழர்களைக் கொண்டிருந்ததும் 'குறிச்சிகள்' என அழைக்கப்பட்ட மூன்று கிராமத்தலைவர் பிரிவுகளை [Village Headman's divisions) உள்ளடக்கியிருந்ததுமான கல்முனைக்கிராமம் அதன் அயல் கிராமமான முஸ்லீம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கல்முனைக்குடியுடன் இணைக்கப்பட்டு 1892 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 1897ம் ஆண்டின் 5459 இலக்கமுடைய ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் நிறுவப்பெற்ற 'சுகாதார நலனோம்புசபை' [Sanitary Board] என்ற சபையினால் 1947 வரை நிர்வகிக்கப்பெற்றதொன்றாகும்.





மிகுதி அடுத்த வாரம்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா தடுப்பூசி ஏற்றுவது நலமானதா?



**உலகளாவிய** ரீதியில் பல வல்லரசுகளையே திணறடிக்க வைத்து தனது பலத்தை நிரூபித்துள்ளது கொரோனா வைரஸ், அத்துடன் இதன் உருமாறிய விகாரநிலை வைரஸ் இவ் வைரசுக்களினால் ஏற்படும் தாக்கத்தை எதிர்கொள்ளும் வகையில் பல நாடுகள் தடுப்பூசிகளை கண்டுபிடித்து அதன் பாவனைகளையும் அதிகரித்து வருகின்றது.இந்நிலையில் எமது நாடும் இதனை அறிமுகப்படுத்தியுள்ளது.

பொருளாதார ரீதியில் மத்திய நிலையிலுள்ள எமது நாட்டில் இது வழங்கப்படுவது என்பது சிறந்த சுகாதார முன்னேற்பாட்டு திட்டமாகவே கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றது.இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள தடுப்பூசி இந்தியாவின் தயாரிப்புடன் [COVISHIELD VACCINE] ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது ஓர் சிறந்த எதிர்ப்பு சக்தி கொண்ட தடுப்பூசாகவே கருதப்படுகின்றது.எனினும் பலதரப்பட்ட மக்களிடம் இருந்தும் இதற்கு மாறான கருத்தும், வீண் அச்சமும் நிலவுவதையும் காணமுடிகிறது.உண்மையில் தற்போது எமது பிரதேசத்தில் கொரோனா தொற்றாளர்கள் இனம்காணப்பட்டு தனிமைப்படுத்தும் நிகழ்வே நடைபெறுகின்றது. இதில் தாக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்கள் குறைவாகவே உள்ளனர். காரணம், எமது நாட்டின் இயற்கை வளமான வெயில், அடுத்து நாம் நோய்



ப.சந்திரமோகன்
Sanramohan1@gmail.com

எதிர்ப்பு சக்தியை ஓரளவு ஏனும் கொண்டுள்ளதாகவும் இருக்கலாம்.ஆனால் தற்போது உருமாறிய வைரஸ் அவ்வாறில்லை, அதனை எதிர்கொள்ள நாம் இன்னும் நோயெதிர்ப்பு சக்தி கொண்டவர்களாக மாற வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

நாம் இந்த நோயினால் தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்படுவதை விட இந்த தடுப்பூசை எடுத்துக்கொள்வது மிக இலகுவான விடயமாக கருதப்படுகின்றது. கூடுதலான மக்கள் இதனை பயன்படுத்தும் போது இதன் தாக்கம் முற்றாக அற்றுப் போகும் நிலை உருவாகலாம், என நம்பப்படுகின்றது.

ஓர் தாய் இந்த தடுப்பூசியினை எடுத்துக் கொள்ளவதனால் அவரின் கருவில் உருவாகும் குழந்தை இந்த நோயெதிர்ப்பு தன்மையை இயல்பாகவே பெற வாய்ப்புள்ளது. வெளிநாடுகளில் தொற்றுக்குள்ளான தாய்மார் முகக்கவசத்தினை அணிந்து குழந்தைகளுக்கு பாலூட்ட அனுமதிக்கப்படுகின்றனர். இதனை உற்று நோக்குகையில்இ ஓர் பாலூட்டும் தாய்கூட தடுப்பூசியை எடுப்பதனால்இ பிள்ளைகளுக்கும் இதன் எதிர்ப்பு சக்கி உருவாகும் என கூறப்படுகிறது.இதனை எடுப்பதால் ஆண்மை குறைபாடு உருவாகும் என்பது ஓர் தப்பான கருத்தாகவே ஆராச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

வயது வந்த அதிகமானவர்கள் இதனை எடுத்துக்கொள்ளும் போது வீட்டிலுள்ள குழந்தைகள் தொற்றுக்குள்ளாகும் வீதம் குறைவடைகின்றது.இதனை நாம் ஏற்றிக்கொண்ட பின் எங்காவது ஓர் தொற்றுக்குள்ளாகும் போது தானாகவே தடுப்பூசியினால் ஏற்படும் எதிர்ப்பு சக்திமூலம் இந்நோயின் தாக்கதில் இருந்து விடுபட வாய்ப்புக்கள் அதிகமாகின்றது.எனவே நாம் எந்த அச்சமும் இன்றி இந்த தடுப்பூசியினை எமக்கு கிடைக்கும் அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மிக விரைவாக எடுத்துக்கொள்வதன் மூலம் எம்மையும்இ எமது உறவுகளையும்இ எமது சமூகத்தையும் பேரழிவிலிருந்து விடுவித்துஇ ஓர் சுபிட்சம் நிறைந்த நாட்டினை கட்டியெழுப்பும் தனிப்பிரஜைகளாக உருவெடுப்போம்.

# மதமும் மதமாற்றமும்

**மதம்** என்பது மனிதனை நல்வழிப்படுத்தும் போதனைகளை உள்ளடக்கியதாக ஆன்மீகத்தை வளர்ப்பதாக மனிதனை தெய்வீக நிலைக்கு கொண்டு செல்வதாக அமைந்துள்ளது. இதற்கு அறிவு, மகிழ்ச்சி, சம்மதம், பெருமை, செருக்கு, போதனை என்றெல்லாம் பொருளுண்டு. உலகில் படைக்கப்பட்ட அனைத்தும் இறைவனால் படைக்கப்பட்டவை.

'அவன் இன்றி அணுவும் அசையாது' என்ற அசையாத நம்பிக்கையில் வாழும் நாம் எந்த இனத்தின் வயிற்றில் எம்மை இறைவன் பிறக்க வைக்கின்றானோ அந்த இனத்தைச் சார்ந்தவனாக கருதப்படுகின்றோம். அந்த வகையில் தமிழர் வயிற்றில் பிறந்தால் தமிழர் என்றும், சிங்களவர் வயிற்றில் பிறந்தால் சிங்களவர் என்றும், இஸ்லாமியர் வயிற்றில் பிறந்தால் இஸ்லாமியர் என்றும் இனம் காட்டிக் கொள்கின்றோம். தமிழர், சிங்களவர் என்பதை விட கிறிஸ்தவர், இந்துக்கள், பௌத்தர், இஸ்லாமியர் என்று மதரீதியாக சொல்லிக் கொள்கின்றோம். எந்தத் தாய் எம்மை பத்து மாதம் சுமந்திருந்து பெற்றாளோ, எந்தத் தாயின் வயிற்றிலிருந்து நாம் வந்தோமோ அந்தத் தாயை அம்மா என்று அழைக்கும் நாம், இவள் எனது தாய் இல்லை. இவளது வயிற்றில் நான் பிறக்கவில்லை என்று சொல்ல முடியாது. அப்படி சொல்வது வெட்கப்பட வேண்டிய விடயமாகும். ஒவ்வொரு இனத்துக்கும் ஒவ்வொரு தனித்துவம் உண்டு. கலை, கலாசார விழுமியங்கள், பண்பாட்டு பாரம்பரியங்கள், நடை, உடை, பாவனைகள் அனைத்தும் வேறு பட்டவையாக் காணப்படுகின்றன. இதிலிருந்து நாம் ஒவ்வொருவரும் நமது மதத்தை பேணவேண்டிய, காப்பாற்ற வேண்டிய கடப்பாடு உடையவர்களாக அல்லது




கா.சந்திரலிங்கம்
Chandralingham13@gmail.com

கட்டாயம் உள்ளவர்களாக உள்ளோம். அடுத்து மதமாற்றத்திற்கு வருவோம். மதமாற்றம் என்பதை இரு வகையில் நோக்கலாம்.

**1.மதம் மாற்றப்படுகிறார்கள்.**
**2.மதம் மாறுகின்றார்கள்.**

மதம் மாற்றப்படுகிறார்கள் என்று சொல்லும் போது, இது இன்று நேற்று நடந்ததல்ல. கிறிஸ்துவுக்கு முன் சமண, பௌத்த சமயங்கள் ஆதிக்கம் செலுத்திய பொழுது, பல சமயங்கள் தங்கள் தங்கள் சமயங்களை பரப்ப எடுத்த முயற்சிகள் ஏராளம்.

அப்பொழுது சமண, பௌத்த சமயங்களில் நன்கு படித்த அறிஞர்கள், சமயவாதிகள் சைவ சமயத்தை மட்டுமன்றி சாக்தம், வைஷ்ணவம், காளாபத்தியம் போன்ற பல்வேறுபட்ட மதங்களை அழிக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தனர். ஏனைய சமயத்தவர்களை அனல் வாதம், புனல் வாதம் என்பவற்றுக்கு அழைத்தனர். அனல்வாதம் என்பது நெருப்போடு சம்பந்தப்பட்டது. புனல் வாதம் என்பது நீரோடு சம்பந்தப்பட்டது. அனல் வாதத்துக்கு உதாரணமாக பாண்டியனின் சூலைநோயைக் குறிப்பிடலாம். பாண்டியன் சமண சமயத்திற்கு மாறி சமணத்தைப் பரப்பிய பொழுது மனம் நொந்த மங்கையர்க்கரசியார் அழைத்தபோது அழைப்புக்கு வருகை தந்து தங்கியிருந்த, சம்பந்தரின் மடத்தை சமணர்கள் தீக்கிரையாக்கிய பொழுது அதே தீயை பாண்டியனது உடலில் சேர்ப்பித்தார் சம்பந்தர். இறுதியாக நோயைத் தீர்க்க சமணத் துறவிகளும் சம்பந்தரும் போட்டியில் இறங்க 'மந்திரம் ஆவது நீறு' என்று பாடிய பாடல்களும், நோய் நீங்கியதும் சமணர்கள் ஓடியதும் பாண்டியன் சைவனாகியதும் சைவத்தை தீவிரமாக பரப்பியதையும் நாம் அறிந்துள்ளோம். இதிலிருந்து காலத்தால் அழியாத அழிக்கமுடியாத ஆதியும் அந்தமும் இல்லாத சமயம் எமது சமயம். இது அழியாது உலகம் உள்ளளவும் சைவசமயம் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

# சிறந்த குடும்பம்

## ஒரு பெண்ணால் உருவாக்கப்படும்



ஞானமுள்ள பெண் தன் குடும்பத்தைக் கட்டிஎழுப்புகிறாள் ஆனால் ஞானமில்லாதவளோ தன் கைகளினாலேயே தன் குடும்பத்தைச் சீர் குலைத்துப்போடுகிறாள். நீதிமொழிகள் 14.01ஒரு குடும்பத்தின் உயிர் பெண் இவ் வார்த்தைக்கு மேலே கூறப்பட்ட வசனத்துக்கும் பல கருத்துக்கள்இருந்தாலும் இன்றைய காலத்தில் சமூகத்தில் கிறிஸ்தவர்களின் வாழ்வுக்கு முக்கிய இடம் பெறுகின்றது.குடும்பம் ஒரு கோயில் என்ற கருத்து நமதுசமூகத்தில் இருந்து வருகின்றது இந்த குடும்பத்தை நடத்துவது பெரிய பொறுப்பு பெண்ணுக்கு மறைமுகமாகஇந்த சமூகத்தினால் ஒப்படைக்கபடுகின்றது.

ஒரு இடத்திலும் புகழப்படுவதில்லை பெண் மறைமுக பொருளாகவே இருக்கிறாள். குடும்பத்தின்தலைவனான ஆணுக்கே சமூகத்தினால் சகல நன்மைகளும் கிடைக்றின்றது பின்னால் ஒரு பெண் இருக்கின்றாள் என்ற உண்மை இந்தசமூகத்தினால் மறைக்கப்படுகின்றது.நமது கிறிஸ்தவ வாழ்கையிலும் இவ் உண்மை தன்மையைநாம் ஆறிந்தவர்களாகயிருக்கின்றாமா நமது வாழ்விலும்பெண் அடிமைத்தனம் சுகந்திரம் விடுதலை பற்றி அதிகமாக கதைக்கிறோம் நடைமுறை வாழ்கையில்இந்த செயல்பாடுகள் இடம் வழங்குவதில்லை என்கிற உண்மை தன்மையை மறந்தவர்களாகஇருக்கிறோம்.

கி.மு. 10ம் நூற்றூண்டாளயில் சலொமோன்அரசன் நிதிமொழிகள் புத்தகம் எழுதியதாக வரலாறுகள் கூறுகின்றது இவ் புத்தகத்தில்வெற்றிகரமான வாழ்கை வாழ்வதற்கேற்ற இறைவனால் கொடுக்கப்பட்ட பல நடைமுறையான அறிவுரைகள்அடங்கியுள்ளன.இது இறைவனால் மனிதனுக்கு வழங்கப்பட்ட இறை ஞானம் உண்டு என்றும் அத்துடன்இறைவனின் அருளால் மனிதன் பெற்றிருக்கின்ற பகுத்தறிவு ஒன்று உண்டென்றும் இவை இரண்டுமே நமதுநாளாந்த வாழ்கையில் பங்காற்ற வேண்டும். என்றும் இது நமக்கும் கற்பிக்கிறது. இறைவனின்நம்பிகையையிருப்பதும் அவருக்குப் பயந்து நடப்பதுமே ஞானத்தின் முதல்படி என்று இப் புத்தகம் நமக்கு கூறுகின்றது.கி.பி 10ம் நூற்றாண்டளவில் சாலோமோன் அரசன் எழுதிய இவ் வசனம் இன்றையகாலத்துக்கு மிகவும் பொருத்தமானதாயிருக்கின்றது.குடும்பத்தில்தலைவன் தலைவி பிள்ளைகள் மற்றும் உறவினர் என பலர் ஒரு குடும்பத்தில் இருக்கின்றர்கள்அவர்களுக்குள் வரும் சண்டைகள் கருத்து முரன்பாடுகள் வருகின்ற பொழுது இப் கருத்துகளை குடும்பத்துடன்கதைத்து முரண்பாடுகளுக்கான தீர்வுகளை நாம் குடும்பமாக எடுக்க வேண்டும்.

நாம் கருத்துகளைமற்றவர்களுடன் கதைக்கும் பொழுது குடும்பத்தில் பிரிவுகள் வருகின்றது இவ் பிரிவுகளுக்கு சரியான விடை சமூகத்தினூலும் கிடைப்பதில்லை என்பது உண்மையாகயிருக்கின்றது. ஆகவே நாம் குடும்பத்தில் நல்லதே கெட்டதே குடும்பமாகதீர்வு கண்பது மிக மிக முக்கியமாகயிருக்கிறது.

ஒரு நிறுவனத்தில் நல்ல முடிவுகளை வழங்குவதக்குசெலாற்றுவதக்காகவும் நல்ல நடைமுறைகளை பின்பற்றுகின்றார்கள் உதாரனமாக 5முறை நடைமுறைபடுத்தபடுகின்றது நடைமுறையில்இருக்கின்றது ஆகவே குடும்பமாக நடைபெறுதல் நல்ல முடிவுகளை குடும்பமாக நல்லதீர்மானங்களை நாம் தீர்மானக்கலாம் இதில் பெண்களின் பங்களிப்பு மிகவும்முக்கியாகனதாகயிருக்கிறது. ஒரு பெண் இன்னுமோர் பெண்னிடம் குடும்ப முரண்பாடுகளை கூறும்பொழுதுமிகவும் நிதானமாக கேட்டு உடனேடியாக வேறு பெண்னிடம் முகம் கை கால் எல்லாம் வைத்து கூறப்படும்இதனால் தீர்வு கிடையாது மேலும் குடும்பத்தில் புதிய முரண்பாடுகள் வரும் இதனால்தான் பல நூற்றூணடுகளுக்கு முன்னர் குடும்பத்தில் பெண்களின் முக்கிய பங்கு பற்றி சலொமோன் அரசன்நிதிமொழிகள் புத்தகம் எழுதியதாக வரலாறுகள் கூறுகின்றது இவ் புத்தகத்தில் வெற்றிகரமானவாழ்கை வாழ்வதற்கேற்ற இறைவனால் கொடுக்கப்பட்ட பல நடைமுறையான அறிவுரைகள் இப் புத்தகத்தில்இருக்கின்றது.

சேமிப்பு விடயத்தில் கணவன் மனைவி இருவருக்கும்தெரிந்தே சேமிப்பு நடைபெறுதல் வேண்டும் தனித்தனியே சேமிப்பு நடைபெற்றால் அது குடும்பிரிவினையை உருவாக்கும்குடும்ப ஜெபத்தின் மூலம் இப் பிரச்சனைகளுக்குஇலகுவாக விடை கிடைக்கும் குடும்பமாக நாம் ஜெபிக்கும் பொழுது எல்லா கேள்விகளுக்கும் விடை இலகுவாக கிடைத்துவிடும்.

தோ.தேவஅருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# To sir with love

## ஓர் ஆசிரியரின் சிறந்த பண்புகளை வெளிக்காட்டி நின்ற ஆங்கிலத் திரைப்படம்

**கல்லூரிகளில்** ஆசிரியர்கள் மாணவர்களுக்கிடையே ஏற்படுகின்ற முரண்படுநிலையை கருவூலமாகக் கொண்டு பல திரைப்படங்கள் வெளிவந்திருக்கின்றன.இதில் இங்கிலாந்தை சேர்ந்த கல்லூரி ஆசிரியர் எழுத்தாளர் ஈ.ஆர்.பிறெய்த்வெய்ட lE.R.Braithwaite என்பவரின் சுய அனுபவ வெளிப்பாடாக வெளிவந்த To sir with love என்ற நாவல் அதே பெயரில் திரைப்படமாக வெளிவந்தது.

1960 களில் வெளிவந்த இந்த திரைப்படம் சர்வதேச அளவில் சிலாகித்துப் பேசப்பட்டது.கொலிவுட்டின் பிரபல சினிமா தயாரிப்பு நிறுவனமான 'கொலம்பியா பிக்சர்ஸ்' இத்திரைப்படத்தை தயாரித்திருந்தனர்.

இத் திரைப்படத்திற்கு இணையான அல்லது அதனை விட சிறப்பாக இந்த கரு வூலத்தை கையாண்டு இன்றுவரை ஒரு திரைப்படம் வெளிவரவில்லை என்பது நியாயமான ஒன்றாகவே படுகின்றது..


நவீன தொழில்நுட்பங்கள் பாரிய அளவில் வளர்ச்சியடைந்துள்ள திரைப்படத்துறையில் பற்பல பிரமிப்புக்களை பிரமாண்டங்களை வெளிக்காட்டி நிற்கின்ற இன்றைய காலகட்டத்தில் அடிப்படைக் கதையம்சங்களை இந்த தொழில்நுட்ப உத்திகள் மறக்கடிக்கச்செய்து ஒரு மாயாவிநோத காட்சிப்பறைப்புக்குள் ரசிகர்களை சிறைப்படுத்தி அவர்களை பரவசப்படுத்துகின்றன என்ற விமர்சனங்களும் எழாமல் இல்லை.

ஒரு கலைப்படைப்பானது காலங்கடந்தும் பேசப்படுதல் என்பதிலேயே அதன் மகத்துவம் தங்கியுள்ளது. இப்படி பேசப்பட்ட திரைப்படம்தான் To Sir With Love ஓர் ஆசிரியர் தான் புதிதாக பதவியேற்ற கல்லூரியில் தன்னை ஏற்றுக்கொள்ள விரும்பாத மாணவர்களுடன் படுகின்ற அவஸ்த்தைகள் பற்றியதே கதை.

இதில் ஆசிரியராக இயல்பான நடிப்பை எளிய முறையில் வெளிக்காட்டி நடித்திருந்தார் நடிகர் 'சிட்னி பொய்ட்டர்'.என்ஜினியரிங் படித்து முடித்து தொழிலுக்காக காத்திருக்கின்ற நேரம் லண்டனின் கிழக்கு பகுதியில் உள்ள நோர்த் குவே செக்கண்டரி பாடசாலைக்கு ஒரு பயிற்சி ஆசிரியராக கடமையாற்ற வருகின்ற ஒரு ஒரு கறுப்பினத்தவரின் கதையே இது.

இதில் விசேடமாக கவனிக்கப்படவேண்டிய ஒரு அம்சம் என்னவென்றால் இந் பிரதேசத்தை சுற்றியுள்ள பல கல்லூரிகளில் ஒழுக்கமின்மை ஆசிரியரை மதிக்காத தன்மை இவற்றிற்காக விலக்கப்பட்ட மாணவர்களே இந்த கல்லூரியில் வந்து சேர்ந்திருந்தனர்.

இந்த மாணவ 'இலக்கணப் பண்புகளுடன்' போராடுகின்ற அமைதியான ஓர் கதாபாத்திரத்தில் சிட்னி பொய்ட்டர் நடித்திருந்தா ர்.இறுதியில்; அந்த மாணவர்கள் அனைவரது மனங்களையும் தனது ஆசிரியப் பண்பினாலும் அன்பினாலும் வென்றெடுக்கின்றார்.




வகுப்பில் இரண்டு மாணவர்கள் ஆசிரியருக்கு எதிராக மாணவர்களை தூண்டிவிடுகின்றனர்.மாணவன் பென்காம் மாணவி பமீலா இருவருமே ஆசிரியரை தகாத வார்த்தைப் பிரயோகங்களினாலும் கேலிகளாலும் துன்புறுத்துவதிலும் அவமானப்படுத்துவதிலும் முன்னிற்கின்றனர்.இவை யாவற்றையமே தனது அமைதியான சுபாவத்தினாலும் ஒரு புன்சிரிப்பினாலும் இதமான பேச்சினாலும் லாவகமாக கையாழ்கின்றார்.ஆனால் பெண்களின் உள்ளாடைகளை மாணவர்கள் வகுப்பில் தீ வைத்து கொழுத்தும் தருணம் தனது பொறுமையை இழக்கும் அவர் மாணவிகளை மட்டும் வகுப்பில் அமரச்சொல்லி ஆண்களை வெளியே அனுப்பிவிடுகிறார். அப்போது அவர் ஆற்றுகின்ற உரையானது மாணவர்களை அவர்பால் ஈர்த்து விடுகின்றது.

புத்தகப்படிப்பிற்கு அப்பால் சென்று நீங்கள் எந்த விடயமானாலும் என்னுடன் வெளிப்படையாகவே பேசலாம். அது நட்பு காதல் செக்ஸ் திருமணம் எது பற்றியதாகவும் இருக்கலாம் என்கிறார் மாணவர்கள் திகைத்துப் போகின்றனர். ஒரு மாணவியின் தாயார் இறந்தபோது அஞ்சலிக்காக மலர்வளையம் வாங்குவதற்காக மாணவர்களிடையே பணம் வசூலிக்கப்படுகிறது. இதில் ஆசிரியரை வேண்டுமென்றே புறக்கணிக்கின்றனர்.ஆனால் இறந்த தாயாரின் இறுதிக் கிரியைகளின் போது ஆசிரியர் ஆற்றும் உரையினால் மாணவர்கள் அனைவருமே வாயடைத்து நிற்கின்றனர்

குறிப்பாக கிளைமாக்ஸ் காட்சி.; தான் பட்டம் பெற்ற என் ஜினியர் தொழிலுக்கான நியமனக் கடிதம் வந்ததும் ஆசிரிய தொழிலை விட்டு விலகிவிட முடிவெடுக்கின்றார்.தனது இறுதி வகுப்பை நடாத்திக்கொண்டிருக்கையில் திடீரென வகுப்பறைக்குள் நுழைந்த ரவுடி மாணவர்கள் இருவர் இவரை வழமை போன்றே கேலிபண்ணியபடி ஒரு தேநீர்க் கப் ஒன்றை பரிசளிக்கின்றனர். கண்ணீர் முகங்களுடன் ஏனைய மாணவர்கள் நின்று கொண்டிருக்க வழமை போல இவர்களது அவமான செய்கைகள் தொடர்ந்தகொண்டே இருக்கின்றன..அன்பளிப்பை பெற்றுக் கொண்டு தனது அறைக்கு வந்து பிரித்துப் பார்க்கையில் அதில் To sir with love என எழுதப்பட்டிருக்கின்றது.மாணவர்கள் தன்னை ஏற்றுக்கொண்டனர் என்றும் அவர்களது அன்பு வெளிப்பட்ட விதமும் ஆசிரியரை மனம் நெகிழவைக்கின்றது.

மாணவர்கள் அனைவரும் புடைசூழ வந்து ஆசிரியரிடம் அவருடனான தங்களது நேசிப்பை வெளிப்படுத்தி நிற்கின்றனர். To sir with love என்ற அருமையான மனதை நெருடும் பாடல் ஒலிக்கிறது.

இறுதியில் என்ஜனியரிங் பதவிக்கான நியமனக் கடிதத்தை கிழித்து எறிந்து விட்டு வீழ்ந்து கிடக்கும் ரோஜா செண்டை எடுத்து மேசையின் மீதிருந்த பூச்சாடியில் வைக்கின்றார்.அவரது மனமாற்றம் கலா பூர்வமாக வெளிப்படும் காட்சியில் சிட்னி பொய்ட்டரின் அற்புதமான நடிப்பு அபாரம்.;

பின்நாட்களில் 1964 ல் Lilly of the Field என்ற திரைப்படத்திற்காக ஒஸ்காரர் விருது மற்றும் 2002 ல் சாதனையாளர் விருது போன்ற பல விருதுகளை சிட்னி பொய்ட்டர் அவர்கள் பெற்றார்.




சபா சபேஷன்
sabasabeshan@yahoo.com

# முகமற்ற மனிதன்

நேற்றுக்கூட என் வீட்டுப்
படலை முன்னால்
தன்வீட்டுக் கழிவுகள் கொண்ட
பொதியோன்றை
எறிந்து விட்டுப் போயிருந்தான்
ஒரு முகமற்ற மனிதன்

உரித்த கோழிக் கழிவுகள்
அழுகிய மீன்பாகங்கள்
நொதித்த தேங்காய் துருவல்கள்
இன்னும் என்னென்வோ
எல்லாம் இருந்தன அதனுள்
அவன் மனம்போல

தெருநாய்கள் பிய்த்துக்
குதறியிருந்தன அதனை..
அவன் தெருமுழுவதும் நாறிக்
கொண்டிருந்தான்
நிர்வாணமான அவன்
நாகரீகத்தின் உடலில்
அழுகிய புண்கள்
சீழ் வடிந்து கொண்டிருந்தது
மனதில் ஈக்கள் மொய்த்துக்
கொண்டிருந்தன

வழிப்போக்கர்கள் மூக்கைப்
பொத்தியபடி
துப்பிய எச்சிலும்
உதித்த வசை ஊட்டி
வளர்த்த சொற்களும்
அவனை என்ன
செய்துவிட முடியும்.?
குப்பைகளை புதைக்கத்
தெரியாதோ என்னவோ
அவன் தன் இதயத்தைப் புதைத்து
வெகுநாட்களாயிற்று.

சிவ வரதராஜன்

# கல்லூரனின் கவிதை நூல் வெளியீட்டுக்கான முயற்சி




**கவிஞர்** கல்லூரன் தனது தனித்துவமான கவிதைகளால் இலங்கை கவிதைப்பரப்பில் முக்கியமாக பேசப்பட வேண்டிய ஒருவர் . ஏற்கனவே வெளி வந்த ''வெளிக்குள் வெளி'' என்ற இவரது கவிதை நூல் மூலம் தன் உணர்வு பூர்வமான கவிதைகளில் தன்னை வேறாக இனங்காட்டியவர் ஆங்கில புலமைமிக்க இவருடைய கவிதைகள் இலங்கையின் பிரபல ஆங்கிலப் பத்திரிகைகளான Sunday Observar , Sunday Times ஆகிய வற்றில் வெளிவந்திருக்கின்றன.

இவரது ஆங்கிலக் கவிதைகள் அடங்கிய தொகுதி ஒன்றை வெளியிடும் முயற்சியில் கிழக்கு மாகாண விபுல சாகரம் அமைப்பு ஈடுபட்டு வருகின்றது.



# வருத்தமும் வாழ்க்கை சார் குறிப்புகளும்

வருந்துவதே வாடிக்கையாயிற்று நமக்கெல்லாம்
சிலவற்றை பெற்றதற்கும் சிலவற்றை இழந்ததற்கும்
சிலரை சந்தித்ததற்கும் சிலரரை பிரிந்ததற்கும்
சிலருக்கு உதவியதற்கும் சிலருக்கு உதவமுடியாமைக்கும்
சிலதை தவிர்த்ததற்கும் சிலதை உள்வாங்கியதற்கும்
சிலருடன் நடமண்டதற்கும் சிலரை பகைத்ததற்கும்
சிலரை நினைத்ததற்கும் சிலரை மறந்ததற்கும்
சிலதை தொலைத்ததற்கும் சிலதை பத்திரப்படுத்தியதற்கும்
என்று
வருந்துவதே வாடிக்கையாயிற்று நமக்கெல்லாம்.

எவ்வளவுதான் பெற்றுக் கொண்டாலும்
இழந்தவை பற்றியே அதிகம் வருந்துகிறோம்.

இன்று நிகழ்ந்தது நாளை இல்லை
நாளை நிகழ்வது இனி மீண்டும் இல்லை
இறைவன் ஆட்டுவிக்கிறான்
நாமெல்லாம் ஆடுகிறோம்.

வானமளவு விரிந்து கிடக்கும் இந்த வாழ்வில்
சில கணப்பொழுதுதான் வாழமுடிகிறது எம்மால்
காலம் ஒரு புற்றுநோயாயாய்
நம்மை ஒவ்வொரு கணமும் கொல்கிறது
அந்தந்த கணங்களில் வாழ்வதே வாழ்க்கை
ஆயினும்
எந்த கணத்திலும் வாழ்வதாயில்லை நாம்.

நிந்தவூர் சிப்லி

# மறுதலிப்பு

அள்ளித் தெளிக்கின்ற நிலவு
பால் வீதியாகிப்போன உன்
வீட்டுக் குறுக்கொழுங்கை
முச்சந்தி வானரங்களின்
ஆலம் விழுது ஊஞ்சல்
கடலை வண்டிக்காரனின்
மணியோசை
எங்கோ கேட்கும் பழைய
எம்.ஜி.ஆர் படப்பாடல்கள்
தள்ளாடியபடியே றோட்டைச்
சாய்க்கும் பாலண்ணன்.
பாய்ந்து திமிறும் கட்டாடியாரின் செவல நாய்
நட்புடன் நாம் கதை பேசும்
வாசற்கதவடி....

காலத்தை தின்று தீர்த்த
நமது காத்திருப்புக்கள்
நண்பனே!
இவை அனைத்துயுமே
இன்றை கணங்களில்
மறுதலித்துப் போய்......
இருளடைந்த ஒழுங்கையுள்
வெறிச்சோடிக்கிடக்கிறது
உன் வாசற்கதவடி.
மன்னித்தல் இல்லா உனது
கனத்த இதயம் போல.....

கந்தசாமி ஜனக்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழ் பேசும் மக்கள்

# ஒருகை ஓசையாக பயணிக்க முடியாது!

## பிரபல மூத்த அரசியல் பிரமுகர் எம்.ரி.ஹசன்அலி



**''தமிழ் பேசும் மக்கள்''** என்ற ஒரு புதிய அடையாளம் நமது வடக்கு கிழக்கு அரசியலில் பதியப்பட வேண்டிய தேவையை p2p பேரணி உணர்த்தியுள்ளது.இனியும் வடகிழக்கு தமிழ் பேசும் மக்கள் ஒரு கை ஓசையாக மௌனித்து பயணிக்க முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

என்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம். ரி. ஹசன் அலி தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரசின் ஸ்தாபக பொருளாளரும் மூத்த முஸ்லிம் அரசியல்வாதியும் சமாதானப்பிரியருமான எம்.ரி.ஹசன் அலி கல்முனைநெற் 7வது வாரமின்னிதழுக்காக அளித்த நேர்காணலின்போது மேற்கண்டவாறு கூறினார்.

நிந்தவூரைச்சேர்ந்த அவருடனான விசேட நேர்காணல் இதோ.

**Q கே. ஆரம்பமாகியிருக்கும் ஜெனிவா மனிதஉரிமைகள் பேரவை அமர்வு தமிழர்களுக்கு நீதி வழங்கும் என எதிர்பார்க்கிறீர்களா?**

ப. ஜெனிவா தொடரை நடத்துபவர்கள் நீதி வழங்கும் அதிகாரங்களை கொண்டவர்கள் அல்ல. ஆனால் அந்த அரங்கில் பரிமாறப்படும் கருத்துக்கள் சர்வதேச நாடுகளால் மிகவும் உன்னிப்பாக உள்வாங்கப்படும்.வல்லாதிக்க நாடுகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள நாடுகள் நடுநிலைமை நாடுகள் என பல கூறுகளாக பிரிந்து கிடக்கும் சர்வதேசம் தனித்துவமாக ஒரு முடிவை உடனடியாக எடுக்க முடியாது. எதை எடுத்தாலும் ஏட்டிக்கு போட்டியாக காய் நகர்த்தல்கள் இடம்பெறும் சூழ் நிலை உள்ளதால் உடனடியாக எந்த தீர்வையும் நீதியையும் காண முடியாது என்ற நிலைமையே காணப்படும்.எனினும் இம்முறைய அமர்வில் சிறுபான்மையினரின் கைகள் சற்று ஓங்கக்ககூடிய சூழல் தென்படுகின்றதனை உணரமுடிகின்றது.

**Q கே. முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசுக்கு ஆதரவு தெரிவித்து கை உயர்த்தியது தொடர்பாக?**

ப. இதனைப்பற்றி முஸ்லிம் தரப்பால் நிறைய விமர்சனங்கள் வெளிவந்தமுள்ளன. 20 க்கு கை உயர்த்தியவர்கள் சரமாரியாக தாக்கப்படுகின்றனர். நம் நாட்டில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் அச்சமூட்டும் அரசியல் மாற்றங்கள் அனைத்துக்கும் உந்துதலாக அமைந்துவிட்ட கைதூக்கல்கள் வரலாற்றுத் துரோகத்திற்கே வழி கோலியுள்ளது.

69 இலட்ச வாக்குகள் என்ற இலக்கை அடைந்தவர்களின் இறுமாப்பை வெற்றிக்கம்பத்தை நோக்கி நகர்த்தியவர்கள் மட்டமல்லாது இந் நாட்டின் சிறுபான்மை சமூகத்தின் எதிர்காலத்தை படுகுழிக்குள் தள்ளிவிட்டு, கொஞ்சமும் மனம்வருந்தாமல் தாங்கள் செய்தவற்றை சாதனையாக நினைத்துக்கொண்டு, சவால்கள் விட்டுக்கொண்டும் இருக்கின்றார்கள். மன்னிப்புக்ககோரக் கூட முடியாது, என்று மார்தட்டி நிற்கும் இவர்களை முஸ்லிம் மக்கள் தண்டிப்பதற்கு தயங்கமாட்டார்கள்.

**Q கே. அவர்கள், தற்போது அரசாங்கம் திட்டமிட்டு ஏமாற்றிவிட்டதாக கூறுகிறார்களே.இதை ஏற்கிறீர்களா?**

ப.ஒரு போதும் இல்லை. அப்படியானால் அரசாங்கம் திட்டமிட்டு ஏமாற்றிவிட்டதாக தெரிவிக்கின்ற முஸ்லிம் எம்.பிகள், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக்கு அவர்களின் முறைப்பாடுகளை கையளிக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல அரசியல் அமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்த முஸ்லிம் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் முஸ்லிம் மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும். முஸ்லிம் ஜனாஸாக்களை எரியூட்டுவதை முடிவுறுத்துவார்கள் என்று அரசாங்கத் தரப்பினர் பொய்யான வாக்குறுதியை வழங்கி ஏமாற்றி விட்டார்கள் என்று தற்போது தெரிவித்துள்ள முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிகள், அரசாங்கத்துக்கு ஆதரவாக கை உயர்த்தியமைக்காக கட்சித் தலைமையிடம் வெளிப்படையாக மன்னிப்புக் கோரியுள்ளனர்.

ஆயினும் அவர்கள் அனைவரும் கட்டாயம் முஸ்லிம் மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கோருதல் வேண்டும். ஏனென்றால், இவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்திருப்பவர்கள் முஸ்லிம் மக்களே ஆவர். அதுவும் அரசாங்கத்துக்கு எதிரான பிரசாரங்களை தேர்தல் மேடைகள் தோறும் கடுமையாக மேற்கொண்டே முஸ்லிம் மக்களின் வாக்குகளை இவர்கள் பெற்றுள்ளனர்.

அத்துடன் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் எம்.பிகளும் அதற்கான காரணத்தை கட்டாயம் பகிரங்கப்படுத்த வேண்டும்.

**பி 2 பி பேரணி**

**அரசியல் வரலாற்றில் நாம் கண்ட மிகப் பெரிய சாதனையாகும்**



**Q கே. அண்மையில் அரசியல் அரங்கில் வெகுவாக சிலாகிக்கப்பட்ட பொத்துவில் பொலிகண்டி பேரணி பற்றி ?**

ப: அண்மைக்காலமாக சிறுபான்மை அரசியல் வரலாற்றில் நாம் கண்ட மிகப்பெரிய சாதனையாகும். தொடர் தோல்வியால் துவண்டு கிடந்த தமிழ் பேசும் மக்களுக்கு ஊக்க சக்தியை இந்த பொத்துவில் பொலிகண்டி பயணம் கொடுத்துள்ளது.

'தமிழ் பேசும் மக்கள்' என்ற ஒரு புதிய அடையாளம் நமது வடக்கு கிழக்கு அரசியலில் பதியப்பட வேண்டிய தேவையை இந்த ஊர்வல உணர்வு வெளிப்படுத்தியுள்ளது.

'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்ற பதத்திற்கு உயிர் ஊட்ட வேண்டிய ஒரு தேவைப்பாடு உணரப்படுகின்றது. நடந்து வந்த பாதையை திரும்பிப்பார்த்து பெரு மூச்சு விட்டுக்கொள்ளலாம். ஆனால் நமக்கு முன்னுள்ள பாதையை இரட்டைப்பலத்துடன் எதிர்கொள்ள நாம் தயாராக வேண்டும் என்ற உண்மையை பி2பி உணர்த்தியுள்ளது.



**Q கே: மு.கா.வின் ஸ்தாபக உறுப்பினரான நீங்கள் பிரிந்துவந்து சாதித்தது என்ன?**

ப: இந்த கேள்விக்கு இரண்டொரு வரிகளில் விளக்கம் சொல்ல முடியாது. எனது அரசியல் பயணம் இன்றும் மரணித்த தலைவர் அஷ்ரப் அவர்களின் அந்த முஸ்லிம் காங்கிரசின் பாதையில்தான் சென்றுகொண்டிருக்கின்றது. அவர் மரணிக்கும் போது அமுலில் இருந்த முஸ்லிம் காங்கிரசின் யாப்பைக் கொண்டதாகத்தான் இன்றைய கட்சி உள்ளது.

அஷ்ரப் காலத்தில் அடிக்கடி நடந்த தமிழ்த் தலைவர்களுடனான கலந்துரையாடல்கள் எமது கட்சியுடனும் தொடர வேண்டும் என்பது எனது அவா. அதற்கான எனது வேண்டுகோளை அறிக்கைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளேன். சில முன்னணி தமிழ்த் தலைவர்களுடன் நேரடியாகவும் உரையாடியுள்ளேன் காலம்தான் இன்னும் கனியவில்லை.

வடகிழக்கு தமிழ் பேசும் மக்கள் ஒரு கை ஓசையாக மௌனித்து பயணிக்க முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். எமது புரிந்துணர்வுப்பயணம் 21 வருடங்களுக்கு முன்னர் தளர்ந்து போய்விட்டதாக நான் உணர்கின்றேன்.

**Q கே.புதிய தமிழர் ஐக்கிய பேரவை உருவாக்கம் தொடர்பாக தங்களின் கருத்துக்கள்?**

ப. காலத்தின் தேவை. இனிவரும் தேர்தல்களில் இந்த பேரவை தன் கவனத்தை செலுத்த வேண்டும். தமிழ் பேசும் மக்களின் பேரவையாக அது பரிணமித்தால் நன்று. அதற்கான ஆரம்ப பேச்சுவார்த்தைகளை முஸ்லிம் கட்சிகளுடன் செய்தல் இன்னும் நன்று.

**Q கே. தமிழ் முஸ்லிம் உறவு விரிசலுக்கு காரணமாக அமைந்தது எது? அந்த உறவை மீள்கட்டியெழுப்பமுடியாதா?**

ப:தமிழ் முஸ்லிம் தலைவர்களின் போக்குகள்தான் காரணம். இரு தரப்பும் இதனை நட்புடன் அலசி ஆராய வேண்டும். இரு தரப்பினரும' ஒருவரை ஒருவர் விமிர்சித்து பலவாறாக கட்டுரைகளாக வெளிப்படுத்திக்கொண்டு வருவதனை நான் வாசித்து வேதனைப்படுவதுண்டு.

செம்மொழியான தமிழ் மொழியை தாய் மொழியாக பகிர்ந்துகொண்டு தமிழில் பாண்டியத்துவம் பெற்று இரு சமூகங்களும் பெற்றுக்கொண்டுள்ள அந்த அந்த பெருமிதம் ஏன் நமது உறவுப்பாலமாக ஏற்றுக்கொள்ளப்படல்கூடாது?

என்னைப்பொறுத்தவரையில் இந்த இரண்டு சமூகங்களுக்கிடையில் போடப்பட்டிருக்கும் வேலியானது வெறும் நூல் வேலிதான். நாம் நினைத்தால் அதனை ஊதியே கலைத்துவிடலாம்.

நிச்சயமாக அந்தஉறவை மீளக்கட்டியெழுப்பியேஆகவேண்டும். அது காலத்தின் தேவையும் கூட. விரிசலை ஏற்படுத்திய அரசியல்வாதிகளே இதற்கும் வழிகோல வேண்டும்.

இரு சமுகங்களும் ஒத்தாலன்றி நமது உரிமைகளை பெறமுடியாது. அது மட்டுமல்ல வடக்கு கிழக்கில் யாரும் நிம்மதியாக வாழமுடியாது.

நேர்காணல்: வேதசகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கையர்க்கு மகுடம் சூட்டும் மகளிர் தின நாள்

## மண்ணின் வரலாற்றில் பொறிக்கப்பட்ட பொன்னாள்
## நாம் போற்றவேண்டிய நன்னாள்



**ஒரு** நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல் ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு ஆண், பெண் இருபாலாரதும் பங்களிப்பும் மிக அவசியம்.'ஆணும் பெண்ணும் சரி நிகர் எனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையகம் தழைக்கும்' என்றார் கவிஞர் பாரதி.

இலங்கை மக்கள் சமூகத்தை நோக்கி ஞானமும் உணர்வும் நம்பிக்கையும் மிகுந்த பெண்கள் பரம்பரையை உருவாக்குதல் வேண்டும்.

அந்தவகையில் அறிவையும் பலத்தையும் சிறந்த முறையில் உச்ச அளவில் பயன்படுத்தி தன்னம்பிக்கையுடன் சவால்களை எதிர் நோக்கக்கூடிய வகையில் இலங்கை பெண்கள் பரம்பரைக்கான உகந்த சூழல் ஒன்றை உருவாக்கும் பொருட்டு முறையான திட்டமிட்ட விழிப்பை ஏற்படுத்தி சமூக பொருளாதாரத்தை வளப்படுத்துவதன் மூலம் தேசிய கொள்கைக்கு ஏற்ப மகளிர் மேம்பாட்டை நோக்கிய தேசிய இயந்திரமாக செயற்பட வழிவகுக்கும் வகையில் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்ப கல்விஇ அறநெறி பாடசாலைஇகல்வி சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றத்து.




அந்தவகையில் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இதில் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், மகளிர் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர், முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர், உளவளத்துணை உத்தியோகத்தர் நியமிக்கப்படு பிரதேச செயலாளரின் ஆலோசனைகளின்படியும் வழிகாட்டலிலும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

சிறுவர், பெண்களை பாதுக்கும் வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். பெண்களை வலுவூட்டல், சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வு [ ஒக்டோபர் 01],மகளிர் தின நிகழ்வு[மார்ச் 08], பெண்பிள்ளைகள் தின நிகழ்வு[ ஒக்டோபர் 10] ,பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு வாரம் [ நவம்பர் 25 டிசம்பர் 10] போன்றவற்றை கொண்டாடி வருகின்றன.

துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களை பாதுத்தல், பெண்களுக்கு எதிரான அனைத்துவிதமான பாரபட்சங்களையும் இல்லாமல் செய்யும் வகையில் பல்வேறு விழிப்புணர்வுகளை நடத்தி வருகின்றன.

பொலிஸ் நிலைய சிறுவர், பெண்கள் பிரிவு மற்றும் சிறுவர் நன்னடத்தை பிரிவு, பிரதேச பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், சட்ட உதவி ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு போன்றவற்றுடன் தொடர்புடைய விதத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

எனவே பல்வேறு பிரச்சினைகளுடன் வாழும் பெண்கள், சிறுவர்கள் கிராம சேவகர் ஊடாக பிரதேச செயலக உத்தியோகத்தர்களை அணுகி சிறந்த வழிகாட்டல்களை பெற்று உடல், உள ஆரோக்கியமாக வாழுங்கள். தீர்வு இல்லாத பிரச்சினை என்று எதுவும் இல்லை. எனவே தவறான முடிவுகளை எடுக்காமல் வலுவான பெண்களாக வாழுங்கள்.

## ஆயுட்காலம்

சிங்கம் – 10 முதல் 14 வருடம்
புலி – 20 முதல் 26 வருடம்
சிறுத்தை – 12 முதல் 17 வருடம்
குதிரை – 25 முதல் 30 வருடம்
பூனை – 4 முதல் 5 வருடம்
முயல் – 1 முதல் 3 வருடம்
நாய் – 10 முதல் 13 வருடம்
பசு மாடு – 18 முதல் 22 வருடம்


## பெப்ரவரி மாதம்

02 உலக ஈரநிலத் தினம்
02 உலக திருமண தினம்
04 உலக புற்றுநோய் தினம்
09 உலக வெளிக்கிரக தினம்
11 உலக நோயாளர் தினம்
14 உலக காதலர் தினம்
21 சர்வதேச தாய்மொழி தினம்
22 உலக சாரணர் தினம்
25 உலக காசநோய் தினம்






ரி. நிரக்சன் (தரம் 7) கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை



நி.கஷ்விந்
சக்தி பாலர் பாடசாலை
பாண்டிருப்பு

**கல்முனைநெற் வாசகர்களே... உங்கள் பிள்ளைகளின் சித்திரங்களை எமக்கு அனுப்பி வைத்தால் பத்திரிகையில் நாங்கள் வெளியிடுவோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை மீண்டும் தொடர முயலும் அமெரிக்கா



2015ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட கூட்டு விரிவான செயல் திட்ட ஒப்பந்தத்தை வலுப்படுத்தவும் விரிவுபடுத்தவும் அமெரிக்கா முயற்சிக்கும் என்று வெளியுறவுத் துறை செயலர் ஆண்டனி பிளிங்கன் தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கூட்டு விரிவான செயல் திட்ட ஒப்பந்தமானது (Joint Comprehensive Plan of Action JCPOA) ஜூலை 14, 2015 அன்று ஈரான் மற்றும் சீனா பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா, ஐக்கிய ராச்சியம் மற்றும் அமெரிக்கா ஆகிய ஐந்து நாடுகளின் இணைப்புகளுடன் செய்யப்பட்ட விரிவான 159 பக்க ஒப்பந்தமாகும்.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் செறிவூட்டப்பட்ட யுரேனியம் கையிருப்பை 10000 கிலோவிலிருந்து 300 கிலோவாக குறைக்க ஈரானுக்கு அனுமதி வழங்கப்பட்டது . பதிலுக்கு ஈரான் மீது அமெரிக்கா, ஐரோப்பிய கூட்டமைப்பு, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் ஆகியோர் விதித்த பொருளாதார தடைகளில் இருந்து விலக்கு அளிக்கும் வகையிலும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஆனால் 2018 ஆண்டளவில் இந்த ஒப்பந்தத்தில் குறைபாடுகள் இருப்பதாக கூறி அமெரிக்கா இதிலிருந்து விலகியது. இதனால் பொருளாதாரத் தடைகளை ஈரான் மீது மீண்டும் விதித்தார் அமெரிக்கா முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் இதற்கு பதிலடியாக ஈரான் அணுசக்தி ஒப்பந்த விதிகளை அடுத்தடுத்து மீறியது. இதனால் அமெரிக்காஈரான் இடையே முறுகல் நிலை வலுத்தது.

இந்த நிலையில் புதிய அமெரிக்கா ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்ற பின்பு ஒப்பந்தத்தில் அமெரிக்கா இணைந்து கொள்ள வேண்டும் என்று ஈரான் பல அழுத்தங்களை கொடுத்து வருகிறது. இந்த நிலையில் நிலையில் அமெரிக்கா ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்கட்டும் அதன் பிறகு நாங்கள் அணுசக்தி ஒப்பந்தத்துக்கு முழுமையாக இணங்கி நடப்போம் என ஈரான் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# சீனா முஸ்லீம் உய்குர் சிறுபான்மையினரை நடத்துவது இனப்படுகொலையே

## கனடா பாராளு மன்றில் நிறைவேற்றியுள்ள தீர்மானம்

ஜின்ஜியாங்கின் வடமேற்கு பிராந்தியத்தில் பெரும்பாலும் முஸ்லீம் உய்குர் மக்களை நடத்துவது குறித்து சீனா உலகம் முழுவதும் இருந்து பல எதிர் விமர்சனங்களை எதிர்கொள்கிறது.

கடந்த சில ஆண்டுகளில் ‘மறு கல்வி முகாம்கள்’ என்று அரசு வரையறுக்கும் விஷயத்தில் சீனா ஒரு மில்லியனுக்கும் அதிகமான உய்குர்களை தடுத்து வைத்திருப்பதாக மனித உரிமைகள் குழுக்கள் நம்புகின்றன.

இதை முதன் முதலில் வெளிச்சத்திற்கு கொண்டுவந்தது அமெரிக்காதான் . அதைத் தொடர்ந்து.

கனடாவின் பாராளுமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது, இது சீனாவின் முஸ்லீம் உய்குர் சிறுபான்மையினரை நடத்துவது இனப்படுகொலை என்று எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சியால் கொண்டு வரப்படட இந்த பிரேரணை திங்களன்று பொது மன்றத்தில் 2660 என்ற வாக்கெடுப்பில் நிறைவேற்றப்பட்டது. ட்ரூடோவும் அவரது முழு அமைச்சரவையும் வாக்களித்தனர்

‘ஒரு மில்லியனுக்கும் அதிகமான உய்குர்களும் பிற



துருக்கிய முஸ்லிம்களும் முகாம்களில் உள்ளனர் அல்லது இருந்திருக்கிறார்கள். சாட்சிகளிடமிருந்தும் தப்பிப்பிழைத்தவர்களிடமிருந்தும் நாங்கள் கேட்ட சாட்சியங்கள் மிகவும் பயங்கரமானவை என்று கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் எரின் ஓ’டூல் வாக்களித்த பின்னர் செய்தியாளர்களிடம் கூறினார்.

சீனாவின் தொலைதூர மேற்கு பிராந்தியமான சிஞ்சியாங்கில் உள்ள முகாம்களில் குறைந்தது ஒரு மில்லியன் முஸ்லிம்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை வக்கீல்களும் ஐக்கிய நாடுகளின் நிபுணர்களும் இதை உறுதி செய்கின்றனர். ஆனால் சீனாவோ

துஷ்பிரயோகங்களை மறுத்து, அதன் முகாம்கள் தொழிற்பயிற்சி அளிப்பதாகவும், தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்குத் தேவை என்றும் கூறியுள்ளது. சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் செவ்வாயன்று இந்த பிரேரணை ‘உண்மைகளையும் பொது அறிவையும் புறக்கணிக்கிறது’ என்றும், பெய்ஜிங் கனடாவுடன் ‘கடுமையான எதிர்ப்பை பதிவு செய்துள்ளதாகவும் கூறினார்.

கனடாவுக்கான சீனத் தூதர் காங் பீவு, கன்சர்வேடிவ் கட்சியின் தீர்மானத்தை நிராகரித்து, சின்ஜியாங்கில்‘ இனப்படுகொலை’ என்று அழைக்கப்படுபவை எதுவும் இல்லை என்றார்.

‘உண்மைகளை மதித்தல் மற்றும் தவறான தகவல்களையும் பொய்களையும் பரப்புவதை நிறுத்துங்கள்’ என்று சீன தூதரகத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில் காங் கூறினார் .



# உலக வலம்

சபா தயாபரன்
sabathayaparan@gmail.com

# பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள இந்தியா வரும் சீன அதிபர் ஜி ஜின்பிங்..?



சீனாவின் ஜனாதிபதி ஜி ஜின்பிங் இந்த ஆண்டு இறுதியில் பிரிக்ஸ் உச்சிமாநாட்டிற்கு இந்தியாவுக்கு வருகை தர இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. . இந்த ஆண்டு இறுதியில் பிரிக்ஸ் [பிரிக்ஸ் என்பது பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளின் கூட்டமைப்பு ஆகும்] உச்சி மாநாட்டை நடத்த இந்தியாவுக்கு சீனா தனது ஆதரவை வெளிப்படுத்தியதை அடுத்து இந்த உறவுமுறை மேன்பட்டது . கொரோனா வைரஸ் நிலைமை கட்டுக்குள்ளாகும் பட்சத்தில் சீன அதிபர் ஜி ஜின்பிங் பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ள இவ் ஆண்டு இறுதியில் இந்தியா வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சீன அதிபர் ஷி ஜின்பிங் கடைசியாக 2019ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சென்னைக்கு விஜயம் செய்தார். எனினும், 2020ஆம் ஆண்டு ஏப்ரல், மாதங்களில் இருந்து இந்தியசீன எல்லையில் லடாக் பகுதியில் எல்லைப் பிரச்சினை தொடங்கியது.

இதற்கிடையே ஜூன் 15ஆம் தேதியன்று கல்வான் பள்ளத்தாக்கில் இந்திய சீன ராணுவத்தினர் மோதிக்கொண்டதில் 20 இந்திய ராணுவ வீரர்கள் வீரமரணம் அடைந்தனர். இதனால் இந்தியா, சீனா இடையேயான முறுகல் நிலை மோசமடைந்தததது. இருதரப்பு அதிகாரிகளும் இது பற்றி பேச்சுவார்த்தை நடத்தியதை தொடர்ந்து லடாக்கில் சில பகுதிகளில் இரு நாட்டு ராணுவத்தினரும் தங்கள் இருப்பிடத்திலிருந்து பின்வாங்கியுள்ளனர். மேலும் பிரச்சினையைத் தீர்க்க இரு தரப்பும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையிலேயே சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் வருகை அதி முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

# கொரோனா விதிமீறல்: கட்டாரில் பலர் மீது நடவடிக்கை!

கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுப்பதற்காக முகக்கவசம் அணிவது மற்றும் சமூக இடைவெளியை கடைபிடிப்பது போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை கடைபிடிக்க சுகாதார அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில் கட்டாரில் முகக்கவசம் அணிய தவறிய பலருக்கு உள்துறை அமைச்சகம் [MOI ] பொது வழக்கு விசாரணைக்கு அனுப்பியுள்ளது.

# கொரோனா புதிய வைரஸால் ஜேர்மனியில் மூன்றாவது அலை

திடீர் மாற்றம் பெற்ற கொரோனா வைரஸ்கள் பரவுவதைத் தொடர்ந்து, ஜேர்மனி மூன்றாவது கொரோனா அலையின் ஆரம்ப கட்டத்தில் இருப்பதாக மருத்துவத்துறை நிபுணர் Karl Lauterbach தெரிவித்துள்ளார்.

இரண்டாவது அலையின்போது நடைமுறைக்கு வந்த பொது முடக்கத்தில் இருந்து ஜேர்மன் முற்றாக மீள்வதற்கு முன்னர் தப்போது மீண்டும் கொரோனா பரவல் அதிகரிப்பது, மூன்றாவது அலை துவங்குவதன் அறிகுறி என்கிறார் ஜேர்மன் மருத்துவத் துறை நிபுணர். ஆனால் வெப்பநிலை உயர்வு, பிரித்தானிய கொரோனா வைரஸை பாதிக்காது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

02 ஆம் பக்கத் தொடர்ச்சி...

*அனுப்புவதன் மூலம் உயிரினங்களில் மைக்ரோ கிராவிட்டி விளைவுகளை DreamSpace Academy அதன் முதல் விண்வெளி திட்டத்தில் ஆராய்கின்றது.*

*இச்செயற்திட்டமானது Cygnus NG15 விண்கலம் மூலம் 20 பெப்ரவரி 2021 இலங்கை நேரப்படி இரவு 11.06 மணிக்கு வலலோப்ஸ் ஐஸ்லாந்து, விர்ஜினியா, அமெரிக்காவிலிருந்து சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்பப்பட்டது.*

*விண்வெளி மற்றும் பூமியில் நாற்றுகளின் வளர்ச்சியை ஒப்பிடுவதற்கு பூமியில் உள்ள அணிகள் மற்றும் விண்வெளியிலும் ஒரே நேரத்தில் பரிசோதனையை மேற்கொள்ளுவதோடு, ரெட் கிலோவ்வின் (Red Clove) மற்றும் ரைசோபியம் இடையேயான தொடர்பு பற்றி ஆய்வினையும், ஐகுகு இலிருந்து படங்களில் வேர் முடிச்சு மற்றும் தாவர வளர்ச்சியை அடையாளம் காண இயந்திர கற்றல் கருவியை உருவாக்கும் செயன்முறையில் ட்ரீம்ஸ்பேஸ் அகாடமியின் விண்வெளி ஆய்வகத்தின் கார்டியன் சம்ரத், குழு உறுப்பினர்களான ஃபாலில், அபிஷேத்வர்மன், ரிஷாந்தினி, மற்றும் அபிலாஜினி ஆகியோருடன் இந்த பரிசோதனையை மேற்கொள்ளளவுள்ளனர்.*

*இவ் ஆய்வு செயன்முறையில் இலங்கையிலிருந்து பங்குபற்றும் ஒரே ஒரு குழாம் DreamSpace Academy என்பது குறிப்பிடத்தக்கது.*

*DreamSpace Academy இந்த திட்டத்தில் இடம்பெறுவதற்கு உதவிய நாசா (NASA), மேக்னிட்யூட் (Magnitude.io) மற்றும் பெயரிடப்படாத ஆதரவாளர்களுக்கு நன்றிகளை தெரிவித்து கொள்கின்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்முனை ஹிமா சுப்பர்லீக் கிரிக்கட் சுற்றுத் தொடரில்

# ஸ்ருடியோ 96 பிறதர்ஸ் அணி வெற்றிவாகை

( சகா )

**கல்முனை** பிரதேச கழகங்களை ஒன்றிணைத்து கீமா நிறுவனத்தின் அனுசரனையில் இடம்பெற்ற கல்முனை ஹிமா மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியில் ஸ்ருடியோ 96 பிறதர்ஸ் அணி வெற்றிவாகைசூடி சாம்பியன் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது.

அணிக்கு 11 பேர்கொண்ட 8 ஓவர் கிரிக்கட்சுற்றுப்போட்டி கல்முனை உவெஸ்லி மைதானத்தில் 13 14 20 ஆகிய தினங்களில் நடைபெற்று வந்தது.

இச்சுற்றுத்தொடரில் கல்முனையின் பிரபல கழகங்களைச் சேர்ந்த வீரர்கள் ஆறு அணியினராகப் பிரிக்கப்பட்டு 06 அனுசரணையாளர்கள் ஒப்பந்தம் செய்திருந்தனர். இறுதிப்போட்டி கடந்த சனிக்கழடிமை நடைபெற்றது இறுதிப்போட்டிக்கு ஸ்ருடியோ 96 பிறதர்ஸ் அணியும் விஆர்கே அணியும் தெரிவாகி மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய விஆர்கே அணி 8 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 72 ஓட்டங்களைப்பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ருடியோ 96 பிறதர்ஸ் அணி 9.2 ஓவர்களில் 73 ஓட்டங்களைப்பெற்று வெற்றிவாகை சூடியது.

உவெஸ்லி உயர்தரப்பாடசாலை அதிபர் செ.கலையரசன் சரவணாஸ் நகைமாளிகை உரிமையாளர் பிரகலாதன் லதன் உள்ளிட்ட அதிதிகள் வெற்றிக்கேடயத்தை ஸ்ருடியோ 96 பிறதர்ஸ் அணித்தலைவர் ஜி.கௌரீஸ் மற்றும் அணியின் அனுசரணையாளரான எஸ்.சிந்துஜன் ஆகியோரிடம் வழங்கிவைத்தனர்.

கல்முனை வரலாற்றில் முதல் தடவையாக நடைபெற்ற சுப்பர்லீக் கேடயத்தை வெற்றிபெற்றதன் மூலம் ஸ்ருடியோ 96 பிறதர்ஸ் அணி புதியசாதனையைப் பதிவுசெய்துள்ளது.














இந்த சுற்றுப்போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் சிறந்த பந்து வீச்சாளருக்கான விருதினை ராகுல் பெற்றிருந்தார். சிறந்த துடுப்பாட்ட வீரராக சஜீவன் சிறந்த களத்தடுப்பாளராக சஹான் அதி வேக களத்தடுப்பாளராக தனு ஆகியோரும் சிறந்த அணியாக வெற்றி விநாயகர் அணியும் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

கிரிக்கட்டில் சிறந்து விளங்கும் சிரேஷ்ட்ட உறுப்பினர்களான த.அமல்ராஜ் ( மதன் ) கிரிக்கட்டின்தடம் என்றும் சேனைக்குடியிருப்பு வின்னர் விளையாட்டுக்கழக தலைவர் க.செல்வராஜ் மிஸ்ட்டர் கிரிக்கட் எனவும் ஹிமா நிறுவனத்தால் பரிசளிப்பு நிகழ்வில் கௌரவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் இளைஞர் சேவை உத்தியோகத்தர் மோகன்ராஜ் விளையாட்டு உத்தியோகத்தர் சுலக்ஷன் மற்றும் நடுவர்களான சி.திலோஜன் அ.கிரிஷாந் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

### கல்முனையில் இருபெரும் கிரிக்கெட் வீரர்கள் கௌரவிப்பு

## மிஸ்டர் கிறிக்கட் செல்வா
## கிரிக்கட்டின் தடம் மதன்





(சகா)

**கல்முனைப்** பிராந்தியத்தின் இரண்டு சிரேஸ்ட கிரிக்கட் வீரர்கள் விருது வழங்கி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

கல்முனை ஹிமா சுப்பர் லீக் கிரிக்கட் சுற்றுப் போட்டி நிறைவுநாளில் கல்முனை உவெஸ்லி மைதானத்தில்வைத்து இக்கௌரவிப்பு இடம் பெற்றுள்ளது.

கல்முனைப்பிராந்தியத்தில் மென்பந்து கடின பந்து கிறிக்கட் துறையில் அன்றிருந்து இன்று வரை தடம்பதித்து தனக்கென தன்னிகரில்லா இடத்தைபிடித்துள்ள தர்மலிங்கம் அமல்ராஜ்(மதன்) கிரிக்கட்டின் தடம் என்ற விருது வழங்கிக்கௌரவிக்கப்பட்டார்.

அதுபோல கல்முனைக்கிரிக்கட்துறை வளர்ச்சியில் முக்கியபங்காற்றி தானும் ஒருவீரராக களத்தில் இன்றுவரை விளையாடிவரும் கல்முனை மாநகரசபைஉறுப்பினரும் தொழிலதிபரும் சமுகசேவையாளருமான கே.செல்வராஜ்(செல்வா) மிஸ்டர் கிறிக்கட் ஒவ் கல்முனை (Mr.Cricket of Kalmunai) என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

பிரதான அனுசரணையாளர் kimaa sports showroom உரிமையாளர் என்.சுஜீந்தர் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் அதிபர் எஸ். கலையரசன் கல்முனை வடக்கு விளையாட்டு உத்தியோகத்தர் சுலக்சன் மற்றும் இளைஞர் சேவை உத்தியோகத்தர் .தி.மோகனராஜ் உள்ளிடோர் கிரிக்கட் வீரர்கள் சகிதம் இவ்விருதுகளை வழங்கிகௌரவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் பத்தித் தொடர்:– 06

# சோல்லவும் வேணும்! சோல்லவும் போடா!!

**03.02.2021** இல் பொத்துவிலில் ஆரம்பித்து 07.02.2021 இல் பொலிகண்டியில் முடிவுற்ற 'பொத்துவிலிலிருந்து பொலிகண்டி வரைக்குமான பேரணி' குறித்துத் தமிழ் அச்சு ஊடகங்களும் மின்னிதழ்களும் சமூக வலைத்தளங்களும் மிகப் பிரம்மாண்டமான செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிட்டன/வெளியிட்டு வருகின்றன.

எழுந்தமானமாகப் பார்க்கும் போது தமிழ் பேசும் இனத்தின் ஒன்றுபட்ட 'பேரெழுச்சி'யாகத்தான் இது தோற்றம் காட்டுகிறது என்பது உண்மைதான். இந்தப் பேரணி வெற்றியா? தோல்வியா? என்பதை ஆராயாமல் நடந்து முடிந்துள்ள இப்பேரணி பற்றிய எனது அவதானங்களை வெளிப்படுத்துவதே இப்பத்தியின் நோக்கமாகும்.

1956 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சி 'திருமலை யாத்திரை' என அழைக்கப்பெற்ற பேரணி ஒன்றை இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தழுவியதாக நடத்தியது. வடக்கின் யாழ்குடா நாடு மற்றும் வன்னிப் பிரதேசத்தில் இருந்து புறப்பட்ட அணியும் கிழக்கில் அக்கரைப்பற்று தென்பகுதியிலிருந்து (திருக்கோவிலில் இருந்து அமரர் அறப்போர் ஆர்.டபிள்யூ. அரியநாயகம் தலைமையில்) புறப்பட்ட அணியும் திருகோணமலையில் ஒன்று சேர்ந்தமைதான் 'திருமலை யாத்திரை' என்பது. வரலாற்றுப் போக்கில் இந்த யாத்திரையின் நேர் விளைவுகள் என்னவெனில் வடக்குக் கிழக்குத் தமிழர்களைத் தமிழரசுக் கட்சி அணிதிரட்டியதும் அதன் பின்னர் வந்த எல்லாப் பாராளுமன்றத் தேர்தல்களிலும் தமிழரசுக்கட்சி தனது வாக்கு வங்கியை அதிகரித்துக்கொண்டதும்தான். எதிர் விளைவு என்னவெனில் தமிழரசின் குவிமையமாகத் திருகோணமலையைப் பகிரங்கப்படுத்தியதன்மூலம் பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகளுக்குத் திருகோணமலையைத் தமிழர்களிடமிருந்து கைப்பற்றித் தம் வசப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தைத் தீவிரப்படுத்தியதால் திருகோணமலை மாவட்டத்தில் இன்று பெரும்பாலான பிரதேசங்கள் பௌத்த சிங்கள மயமாக மாறிக்கொண்டுஃமாற்றப்பட்டுக் கொண்டு வருவதாகும். 'மாடு வாங்க முதல் நெய்க்கு விலை பேசிய'அரசியலால் வந்த வினை இது.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை 1949இல் அக்கட்சி தோற்றம் பெற்ற பின்னர் 1952 இல் சந்தித்த முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் வடக்கில் கோப்பாய்த் தொகுதியிலும் (அமரர் கு. வன்னியசிங்கம்) கிழக்கில் திருகோணமலைத் தொகுதியிலும் (அமரர் ஆர் .இராஜவரோதயம்) மட்டுமே வெற்றியீட்டியிருந்தது. அடுத்து வரும் தேர்தல்களில் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ள வேண்டிய தேவை தமிழரசுக் கட்சிக்கு அன்று இருந்தது. அதில் வெற்றியும் பெற்றது.

கடந்த 05.08.2020 இல் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழரசுக்கட்சிக்கு வடக்குத் கிழக்கு மாகாணங்களில் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வாக்கு வங்கிச் சரிவையும் இப்போது நடைபெற்று முடிந்துள்ள 'பொத்துவில் பொலிகண்டி யாத்திரை' யின் பின்னணியில் வைத்துப் பார்க்க வேண்டியுள்ளது.

இது ஒருபுறமிருக்க, இந்த 'P2P' பேரணியானது அரசியல் கட்சிகள் அல்லாத சிவில் சமூக அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் அதில் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் வந்து கலந்து கொண்டதாகவும் ஊடகங்களில் காட்டப்படுகிறது. இப்பேரணி ஆரம்பித்து வைக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை சிவில் சமூக அமைப்புக்கள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ இரகசியமாகவேனும் இப்பேரணியின் ஏற்பாடுகள் குறித்த முன்னோடிக் கலந்துரையாடல்களை நடத்தியதாகத் தகவல்கள் இல்லை. அன்றியும் குறைந்தபட்சம் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில்தானும் உள்ள குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய உதாரணமாக 'அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கம்:, 'கிழக்குத் தமிழர் ஒன்றியம்', 'அம்பாறை மாவட்ட இந்து நிறுவனங்களின் ஒன்றியம்', 'மட்டக்களப்பு சிவில் அமைப்பு' போன்ற முன்னணி அமைப்புகளின் முக்கியஸ்தர்கள்கூட இப்பேரணியின் ஆரம்பத்தில் பிரசன்னமாயிருக்கவில்லை. மட்டுமல்ல, ஊர்ப் பொதுமக்களும் இதில் பங்கு பற்றியதாக இல்லை. இப்பேரணியை ஒழுங்கு செய்த சிவில் சமூக அமைப்புக்கள் எவை என்பது இன்றுவரை வெளித்தெரியாததொன்றாகவே இருக்கிறது.

பேரணியைப் பொத்துவிலில் தொடக்கி வைத்தவர்களாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன் (யாழ் மாவட்டம்), இரா. சாணக்கியன் (மட்டக்களப்பு மாவட்டம்), கலையரசன் (திகாமடுல்ல மாவட்டம்) ஆகியோரும் மற்றும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சட்டத்தரணி சுகாஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சார்ந்தவர்), மற்றும் இந்து மதகுருவான வேலன் சாமிகளும் கத்தோலிக்க மதகுருவான எழில் அவர்களும்தான் முன்னிலை வகித்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா. அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், ஞா. ஸ்ரீநேசன் ஆகியோரும் (மூவரும் தமிழரசுக் கட்சியை சேர்ந்தவர்கள்) இவர்களுடன் இணைந்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களுள் தமிழரசுக் கட்சியை சேர்ந்த மா.நடராசாவைத் (மட்டக்களப்பு மாவட்டம்) தவிர வேறு எவரும் கலந்து கொள்ளவில்லை.கல்முனை மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களில் சந்திரசேகரம் ராஜனைத் தவிர வேறு எவரும் பொத்துவில் பக்கம் தலை காட்டவே இல்லை. மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களான தமிழ் அரசுக் கட்சியின் சிரேஸ்ட துணைத் தலைவர் ஃமுன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசாவும் முன்னாள் பொதுச் செயலாளர் ஃமுன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்ஃ மாகாண அமைச்சர் கி.துரைராசசிங்கமும் இப்பேரணியில் இருந்து முற்றாக ஒதுங்கியிருந்துவிட்டனர். இவர்கள் இருவருக்கும் எதிர்காலத்தில் தேர்தல்களில் போட்டியிடும் எண்ணம் இல்லையாதலால் இதில் இருந்து ஒதுங்கி விட்டனர்போலும். கலந்துகொண்ட மேற்கூறப்பட்ட ஏனைய பிரமுகர்களில் வேலன்சாமியையும் 'பாதர்' எழிலையும் தவிர ஏனையோருக்கு மாகாண சபைத் தேர்தல்ஃ பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிடும் எண்ணம் உண்டு போலும். வேறு என்னவோவற்றிற்கெல்லாம் அடிக்கடி அம்பாறை மாவட்டத்திற்குக் 'காவடி' எடுக்கின்றவரும் 1994 ஆம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் (அம்பாறை மாவட்டம்) அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் பட்டியலில் தலைமை வேட்பாளராகப் போட்டியிட்டவரும் தற்போது தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா பேரணியை ஆரம்பித்து வைக்கத்தானும் அம்பாறை மாவட்டத்திற்கு (பொத்துவிலுக்கு) வரவில்லை. மட்டுமல்லாமல் குடுகுடுப்பைச் சாத்திரக்காரன் மாதிரி 'போராட்டம் வெடிக்கும் போராட்டம் வெடிக்கும்' என அடிக்கடி கூறிக்கொண்டு இருந்தவரும் இவர்தான். இப்போராட்டம் (பேரணி) வெடிக்காது என அவர் நினைத்துக்கொண்டிருந்துவிட்டார் போலும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான க. கோடீஸ்வரனும் இதில் பங்கு கொள்ளவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் தலைமைக் கட்சியான தமிழரசுக் கட்சியின் நடத்தை இவ்வாறிருக்க, இன்னொரு பங்காளிக் கட்சியான 'ரெடலோ' வின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் பா.உ. பேரணியை ஆதரித்து அறிக்கை விட்டிருந்தார். ஆனால், பேரணியை ஆரம்பித்து வைக்க அவரும் வரவில்லை. மட்டக்களப்பு மாவட்ட பா.உ. ரெலோவைச் சேர்ந்த கோவிந்தன் கருணாகரம் (ஜனா) அமைதியாக வந்து எந்தவித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் கலந்து கொண்டார். மற்றுமொரு பங்காளிக் கட்சியான 'புளொட்' ஐப் பொறுத்தவரை அதன் தலைவர் த. சித்தார்த்தன் பா.உ. ஆதரவும் இல்லை எதிர்ப்பும் இல்லாமல் அமைதியாக இருந்து விட்டார். அவருடைய கட்சிக்காரர் என்று எவரும் பேரணியில் கலந்து கொண்டதாகத் தெரியவில்லை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்) ஐப் பொறுத்துவரை அக்கட்சியைச் சேர்ந்த சட்டத்தரணி சுகாஸ் என்பவரே பொத்துவிலுக்கு வந்திருந்தார். அக்கட்சியின் தலைவரும் செயலாளருமான முறையே கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் பா.உ. உம், கஜேந்திரன் பா.உ. உம் பொத்துவிலுக்கு வரவில்லை.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியைப் பொறுத்தவரை அதன் தலைவர் சி. வி. விக்னேஸ்வரன் பா.உ.வோ அல்லது அதன் முக்கிய தலைவர்களில் ஒருவரான சுரேஷ;பிரேமச்சந்திரனோ பொத்துவிலில் பிரசன்னமாயிருக்கவில்லை. ஆனால் அக் கட்சியின் செயலாளரான வன்னி மாவட்ட முன்னாள் பா.உ. சிவசக்திஆனந்தன் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து அறிக்கை விட்டிருந்தார். ஆனால், அவரும் பொத்துவிலுக்கு வரவில்லை.

இந்தப் பின்புலத்தில் பின்வரும் கேள்விகள் எழுகின்றன.

1. இந்தப் பேரணியின் ஏற்பாடுகளில் உண்மையில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் சம்பந்தப்படாமல் இது சிவில் சமூக அமைப்புகளினால்தான் ஒழுங்கு செய்யப்பட்டனவென்று ஒரு வாதத்துக்காக எடுத்துக்கொண்டால், இப்பேரணியானது தமிழ்த் தேசிய இனத்திற்கு அதிமுக்கியத்துவம் வாய்ந்ததெனின் இப்பேரணி ஆரம்பித்த இடமான பொத்துவிலுக்கு எல்லாத் 'தமிழ்த் தேசிய கட்சி'களினதும் தலைவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியினதும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினதும் எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளை முன்னணியில் விட்டுப் பின்னால் வந்து கலந்து கொண்டிருந்தால்தானே அது பேரெழுச்சியாக இருந்திருக்கும். சிவில் சமூக அமைப்புகளை உற்சாகப்படுத்துவதாகவும் இருந்திருக்கும். அது ஏன் நடைபெறவில்லை?

2. இன்னொரு வகையில் பார்த்தால், சிவில் சமூக அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்டதாகக் கருதப்படும் இப்பேரணியில் 'தமிழ்த் தேசிய'க் கட்சிகளின் தலைவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சிகளின் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டு இதனை அரசியலாக்கக் கூடாது. பொதுமக்கள் மட்டுமே கலந்து கொண்டு பொது மக்களால் மட்டுமே இப் பேரணி முன்னெடுக்கப்பட்டும் என்ற நிலைப்பாடு தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இருந்திருக்குமேயானால் அல்லது இருந்தது என்று ஒரு வாதத்திற்கு வைத்துக் கொண்டால் பொத்துவிலில் வைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சாணக்கியன், கலையரசன் மற்றும் ஜனாவும் அவர்களுடன் ஏனைய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான அரியநேத்திரன், யோகேஸ்வரன் மற்றும் சிறிநேசன் ஆகியோரும் ஏனைய கட்சி முக்கியஸ்தர்களும் மற்றும் பேரணியின் இடைநடுவில் ஒவ்வொரு இடங்களில் வைத்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்களும் ஏன் கலந்துகொண்டார்கள்? முழுக்க முழுக்கப் பேரணி விவகாரத்தைப் சிவில் சமூக அமைப்புகளிடமே விட்டிருக்கலாமே. பொதுமக்கள் சார்பில் இப்பேரணியின் ஆரம்பத்திலிருந்தே கலந்துகொண்டு முன்னணி வகித்த வேலன் சாமி மற்றும் கத்தோலிக்க மதகுரு 'பாதர்' எழில் ஆகியோர் தாங்கள் புற்றெடுக்கச் சுமந்திரன் குழுவினர் குடி கொண்டுவிட்டனர் என்ற வகையில் திருகோணமலையில் வைத்துக் குழம்பினார்கள்ஃ குற்றம் சுமத்தினார்கள் என்ற தகவலும் உண்டு. அதேவேளை யாழ்ப்பாணத்தில் இருந்து மின்னிதழாக வெளிவரும் 'காலைக்கதிர்' பத்திரிகை இப்பிரச்சனையைத் தொட்டுக்காட்டி இப்பேரணியை ஏற்பாடு செய்ததில் வேலன் சாமிக்கும் பாதர் எழிலுக்கும் சம்பந்தமில்லை. சுமந்திரன் சாணக்கியன் அணிதான் இதன் சூத்திரதாரி எனும் தொனிப்படக் குறிப்பிட்டுச் 'சுமந்திரன்சாணக்கியன்' அணியினரைப் போற்றித் துதிபாடியிருந்தது.

இத்தகைய நிலைமைகளால் இப்பேரணியானது நன்கு திட்டமிடப்படவில்லையென்பதும் தமிழரசுக் கட்சிக்குள்ளே மாவை சேனாதிராசா அணியினரை முற்றாக ஓரங்கட்டும் வகையிலும் மற்றும் தமிழ்த் தேசியக் கட்சிகள் எனக் கருதப்படும் ஏனைய கட்சிகளான சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியையும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் செல்வாக்கிழக்கச் செய்யும் வகையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளேயே அதன் ஏனைய பங்காளிக் கட்சிகளாகத் திகழும் 'ரெலோ' வையும் 'புளொட்' டையும் கூட ஓரங்கட்டி தமிழரசுக்கட்சி ஒன்றையே முன்னிலைப் படுத்தும் வகையிலும் எதிர்காலத்தில் தமிழரசுக் கட்சியினதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் தலைமைப் பீடங்களைச் சுமந்திரன் சாணக்கியன் அணி கைப்பற்றும் வகையிலும் 'தமிழ் பேசும்' இனத்தின் 'ஹீரோ'க்களாக சுமந்திரனும்சாணக்கியனும் அரசியல் மேடையேறும் வகையிலும், சிவில் சமூக அமைப்புக்கள் எனும் போர்வையில் 'சுமந்திரன் சாணக்கியன் 'அணியினரால்' சுடுகுது மடியப்பிடி' எனும் கணக்கில் அவசரம் அவசரமாகவே பேரணி நிகழ்த்தப்பட்டுள்ளது என்பதும் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. அத்துடன் மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் (இணையம்) தலைவரான எஸ். சிவயோகநாதன் என்பவர் கொடுத்த கயிறை சாணக்கியன் விழுங்கிக் கொண்டதாகவும் பின் அதன் தொடர்த்தேர்ச்சியாய்ச் சாணக்கியன் கொடுத்த கயிறைச் சுமந்திரன் விழுங்கிக் கொண்டதாகவும் அதுவே இப்பேரணியின் 'ரிஷணீமூலம்நதிமூலம்' என்ற தகவலும் கிழக்கைச்சேர்ந்த சிவயோகநாதனுக்கு வடக்கிலிருந்து வேலன் சாமியும் 'பாதர்' எழிலும் உதவியுள்ளனர் என்ற விடயமும் இப்போது மெல்லக் கசிந்துள்ளன. இப்பேரணி பற்றிய மேலதிக அவதானங்களை அடுத்த வாரமும் பார்க்கலாம்.

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

## இவ்வார நிகழ்வின் பதிவுகள்....



பாண்டிருப்பு சிவனாலய பாற்குடபவனி..




கல்முனை விவேகானந்தாவில் கற்றலுபகரணணங்கள் வழங்குகையில்..



மல்வத்தை பிரதானவீதி 1 கோடி ரூபா செலவில் LED ஒளியூட்டப்படுகையில்..



மட்டுநகரில் சாரணதந்தை பேடன்பவலின் பிறந்த தின நிகழ்வின் போது..



கல்லடி உதயம் விழிப்புலனற்றோருக்கு உதவுகையில்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட்டுக்கு பின்னரான பொருளாதார மாற்றம்

**அண்மைக்காலமாக** உலகின் மூலை முடுக்குகள் எல்லாம் பல பல மாற்றங்களை நாம் கண்டும் அறிந்தும் வருகின்றோம். இந்த மாற்றங்கள் பல மாற்றுவழிகளையும் அதேபோல் அழிவுகளையும் கொண்டு எமக்கு பாடம் புகட்டி வருகின்றது. அதில் நமக்கெல்லாம் தெரிந்த வகையில் அந்த ஆபத்தான கொவிட் 19 வைரஸ் உலகில் முதன்முதலில் அடையாளம் காணப்பட்டு ஒரு வருடத்துக்கும் மேல் ஆகிவிட்டது.

இதன் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இரண்டு மில்லியன் இறப்புக்கள் உள்ளடங்கலாக 90 மில்லியனாக உயர்ந்துவிட்டது. உலகின் பலம்வாய்ந்த மற்றும் ஆரோக்கியமான நாடுகள் என்று பரவலாகக் கருதப்படும் அமெரிக்கா மற்றும் யுனைடெட் கிங்டம் போன்ற நாடுகளாலும் கூட வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை, காரணம் தினசரி நோய்தொற்று கண்டறியப்பட்டு அறிக்கை செய்யப்படும் ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்கத் தவறிவிட்டன.

இன்னொன்றை நாம் அவதானிக்க வேண்டும் நமது அண்டை நாடான இந்தியாவின் நிலைமையும் அப்படியே. இந்த நாடானது கொவிட் 19 இன் முதல் அலைகளை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியதற்காக உலக சுகாதார அமைப்பால் பாராடடப்பட்ட நாடும் கூட. ஆனால் இன்று அங்கும் நெருக்கடி அதிகரித்துள்ளது.

கொவிட் 19 இன் முதல் அலையின் போது பல நாடுகள் வைரஸ் பரவுவதைக் பலமாகக் கட்டுப்படுத்த முயன்றன, ஆனால் அது அதற்கு சாதகமான விளைவைக் கொண்டிருக்கவில்லை. இதன் காரணமாக, ஒருபுறம் ஒரு நாட்டின் உற்பத்தி செயல்முறை தேங்கி, பொருளாதாரம் வீழ்ச்சியடைகிறது, மறுபுறம், வைரஸ் தற்காலிகமாக இல்லாமல் மறைந்து மீண்டும் புதிய புதிய வடிவங்களில் வெளிப்படுகிறது, அதுவும் முன்பை விட வேகமாக பரவுகிறது.

## கல்வித்துறையில் தேவையான மாற்றம்

இவ்வாறான ஒரு கடினமான காலகட்டத்தில், உலகத்தின் அனைத்து நாடுகளும் எதிர்நோக்கிய பிரச்சினைகளை நாமும் அனுபவிக்க வேண்டியிருந்தது, அதேபோல்தான் நாட்டில் கோவிட் 19 இன் இரண்டாவது அலையும் தாக்கத்தினை கொண்டு வந்தது. இந்தப் பின்னணியில்தான் உலக நாடுகள் கோவிட் 19 உடன் வாழ்வதற்கும், பொருளாதாரத்தை வீழ்ச்சியடைய விடாமல் ஒரு நிலையான நிலையை நிலைநிறுத்துவதற்கும் திட்டங்களை வகுத்தன.

ஒருபக்கம் நாடு தனது சுகாதார கட்டுப்பாட்டு விதிமுறைகளை எவ்வளவு காலம் அமுல்படுத்த முடியும் என்ற கேள்வி உள்ளது. நோய்த்தொற்று எதுவும் காணப்படாத வரை நாட்டை மூட முடியுமா? அது சாத்தியம் இல்லை, இது எந்த நாட்டு நடைமுறையிலும் இல்லை. ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு வைரஸ் பரவுவதற்கான வாய்ப்புகளை நீக்குவதன் மூலம் நோய் பரவுவது கட்டுப்படுத்தப்படுகிறது என்பது அனைவரும் அறிந்ததே. ஒருவேளை



நமக்கு வைரஸ் தொற்று கண்டறியப்பட்ட தாயின் அதனை நாம் வீட்டிற்குச் சென்று யாருக்கும் தெரியாமல் மறைக்கக் கூடாது, ஆகவே அந்தக் கொள்கையை மனதில் வைத்து அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

இன்னொருபக்கம் சுமார் ஏழு மாதங்களாக வீட்டில் இருக்கும் பாடசாலை மாணவர்களுக்கு இப்போது பாடசாலைகள்; திறக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பாடசாலைகளை மூடல் என்பது வழமையான நடைமுறைக்கு மாறானவை. பரீட்சைகளை பிற்போட்டு ஒத்திவைப்பது மாணவர்களது வாழ்க்கையை பின்னுக்குத் தள்ள ஒரு காரணம். ஒரு நாடாக, கோவிட் 19 தொற்றுநோயுடன் இணையவழி; கல்வியைப் ஆரம்பித்து வழங்கவேண்டும். ஆனால் வளர்சியடைந்த நாடுகள் நீண்ட காலமாக இந்த முறையைப் பயன்படுத்துகின்றன.

இருப்பினும், இணையவழிக் கல்வி எங்களுக்கு ஒரு தெரியாத ஒன்றாக புதியதாக இருந்து வருகின்றது. இது பாடசாலை மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அந்நியராக இருப்பதில் ஆச்சரியமில்லை. எது எப்படியானாலும் எமது நாட்டில் பாடசாலைக்கு செல்லும் பெரும்பாலான குழந்தைகளுக்கு இப்போது இணையவழி; கல்வி குறித்த சில அறிவு உள்ளது. அது ஓரளவு பழக்கமாக இருந்தபோதே பாடசாலைகள் தொடங்கப்பட்டன.

இன்று பல பாடசாலைகளில் கூட இந்த வசதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைப்பயன்படுத்தி; இந்தச் சந்தர்ப்பத்தில் வகுப்பறையில் பாடவிதானங்களின்போது தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த ஆசிரியர்கள் ஆர்வம் காட்ட வேண்டும். குழந்தைகள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான உந்துதலை இழக்காமல் பார்த்துக் கொள்வது கல்வி அதிகாரிகளின் அதி முக்கிய பொறுப்பாகும். இவ்வாறு பல புதிய வகையான நெருக்கடிகள் எதிர்காலத்தில் உலகில் தோன்றக்கூடும். அதனால் இணையவழி தொழில்நுட்பத்தைப் பற்றிய அறிவும், அதைப் பயன்படுத்த குழந்தைகளின் உந்துதலும் இழக்கப்படாமல் பார்த்துக் கொள்வது கல்வி அதிகாரிகளின் பொறுப்பாகும்.

## சுற்றுலாத் துறையில் எதிர்பார்க்கும் மாற்றம்

பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்வதில் சுற்றுலாத்துறை பாரிய பங்கினை வகித்து வந்துள்ளது. அந்தவகையில் இலங்கையில் சுற்றுலாத்துறையில் சுமார் மூன்று மில்லியன் மக்கள் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இன்று அவர்கள் அனைவரும் சுற்றுலாப் பயணிகள் இல்லாததால் கடுமையான பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். பல ஹோட்டல்கள் மூடப்பட்டுள்ளன. ஊழியர்கள் வேலை இழந்துள்ளனர். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கு முன்னர் நாட்டின் சுற்றுலாத் துறை நல்ல நிலையில் இருந்தது. இருந்த போதும் மெது மெதுவாக கோவிட் 19 க்கு முன்னர் தொழில் புத்துயிர் பெற ஆரம்பித்தது. ஆதனால் இந்தத் துறையில் முதலீடு செய்ய பலர் ஆர்வமாக இருந்தனர். ஆனால் கோவிட் 19 தொற்றுநோய் உலகம் முழுவதும் பரவியதால், இலங்கையின் சுற்றுலாத் துறை சரிந்தது.

இவ்வாறான ஒரு நெருக்கடிச் சூழலில், இன்று சுற்றுலாப் பயணிகள் இல்லாததால், சுற்றுலாத் துறையில் முதலீடு செய்து சொகுசு பேருந்துகளை வாங்கிய கொழும்பை தளமாகக் கொண்ட பேருந்து சேவையைப் பயன்படுத்த அரசு முடிவு செய்திருப்பது ஒரு நல்ல விஷயம். ஆகவே மாற்றீடாக இந்த கைய திட்டங்களை செயல்படுத்துவதற்கும், பயணிகளுக்கு சிறந்த பொது போக்குவரத்துக்கு வழி வகுத்ததற்கும் அரசாங்கம் பாராட்டப்பட வேண்டும்.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு வீழ்ச்சி

விமான நிலையம் திறக்கப்படுவதால், எதிர்காலத்தில் நாம் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதில் ஒன்று நாட்டில் கோவிட் 19 பாதிக்கப்பட்டவர்களின் வருகை. முறுபுறத்தில் நாட்டிற்கு அந்நிய செலாவணியைக் கொண்டுவரும் இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு இன்றய



காலகட்டத்தில் நாட்டின் கதவுகள் திறக்கப்பட வேண்டும். வேலைகளை இழந்த நிலையில், அவர்கள் இனி வெளிநாடு செல்ல முடியாது. புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் தொழில் புரிபவர்களை திருப்பி நாட்டிற்குள் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இவர்கள் வெளிநாடுகளில் பணிபுரிந்தவர்கள், வேலைகள் இல்லாமல் வருகிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மறுபுறம், ஹோட்டல் தொழில் உட்பட இலங்கையில் பல்வேறு துறைகளில் பணியாற்றிய ஏராளமானோர் வேலை இழந்துள்ளனர்.

வெளிநாட்டிலிருந்தும் உள்நாட்டில் வேலையினை இழந்தவர்களும் எமது நாட்டில் வேலைக்கு விண்ணப்பிப்பதால், வேலைகளுக்கான கடுமையான போட்டிகள் இருக்கும், இது வேலைத்தளத்தில் குறைந்த ஊதியத்தினைத் தீர்மானிக்க வழிவகுக்கும். அதிகரித்துவரும் வேலையின்மை சமூக அமைதியின்மை அபாயத்தையும் அதிகரிக்கக்கூடும். இந்த அனைத்து காரணிகளையும் அரசாங்கம் கணக்கில் எடுத்துக்கொண்டு மக்களுக்கு வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான திட்டங்களை உருவாக்க வேண்டும்.

## சிக்கல்களில் இருந்து மீட்சிபெற என்ன வழி?

இந்த இக்கட்டான பின்னணியில், நாம் புதிதாக ஒன்றைப் பற்றி சிந்திக்க வேண்டும். சலிப்பான வாழ்க்கை முறைக்கு அப்பால் நாம் செல்லலாம் மற்றும் எதிர்கால சவால்களை சமாளிக்க ஆக்கபூர்வமான முடிவுகளை எடுக்க முடியும். நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் முயற்சி ஒன்றைக் கைவிடாமல் இருப்பது மட்டுமே. இன்னொரு புறத்தில் கோவிட் 19 உலகப் பொருளாதாரத்தில் ஒரு திருப்புமுனையாக பல புதிய வர்த்தக வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. வர்த்தக சேவைகளை புதிய வழியில் வழங்குவது தற்போதைய நெருக்கடியிலிருந்து வெளியேற ஒரு நல்ல வழியாகும். எனவே வர்த்தக முறமை பன்முகப்படுத்தப்பட வேண்டும்.

சுற்றுலாப் பயணிகள் இல்லாமல் மூடப்பட்ட ஹோட்டல்களை விவசாயத் துறையுடன் இணைந்து செயற்படுத்த முடியும். பிரபலமான விவசாய முறையான செங்குத்து வேளாண்மை தொழில்நுட்பத்தை ஹோட்டல்களில் செயல்படுத்தலாம். இந்த குறைந்த விலை மற்றும் பயன்படுத்த எளிதான முறை இப்போது பல நாடுகளில் செயல்படுத்தப்படுகிறது. கடல் மட்டத்திலிருந்து 1,500 மீட்டர் உயரத்தில் உள்ள ஹோட்டல்களிலும், நிழல் நிறைந்த பகுதிகளிலும், உருளைக்கிழங்கு வெள்ளைவெங்காயம் போன்ற பயிர்களை வளர்க்கலாம். இவ்வாறான இறக்குமதிப் பயிர்கள் இறக்குமதிக்கு மாற்றாக இருக்கும் அதனால் அந்நிய செலாவணியின் வெளிப்பாட்டைத் தடுக்கவும் உதவுகிறது.

விவசாயத்தினை நன்கு அறிந்த தொழில் முனைவோருக்கு நல்ல விவசாயப் பயிற்சி சான்றிதழை வழங்குவதன் மூலம் விவசாயத் துறையால் அவர்களை ஊக்குவிக்க முடியும். மோசமாக பாதிக்கப்பட்டுள்ள மற்றொரு பொருளாதார குழு சுற்றுலா வழிகாட்டிகள். உரிமம் பெற்ற சுற்றுலா வழிகாட்டிகள் மொழி குறித்த தங்கள் அறிவைப் பயன்படுத்தி மொழியின் அறிவைப் பெற விரும்புவோருக்கான படிப்புகளைத் தொடங்கலாம்.

## தொழிற்புரட்சியின் தேவை

தொழில்துறை புரட்சியின் நான்காவது கட்டம் நெருங்கி வரும் நேரத்தில் தொழில்நுட்பத் துறையில் ஒரு புதிய புரட்சியை உருவாக்க தற்போதைய தலைமுறையைப் பயன்படுத்தலாம். கடந்த காலத்தைப் போலல்லாமல், இளைய தலைமுறை கற்களால் ஒரு புரட்சியை மேற்கொள்ளவில்லை அவர்களின் புரட்சி டிஜிட்டல் வடிவம் மற்றும் சைபர்ஸ் பேஸ் மூலம் தொழில்நுட்பத்தில் உள்ளது. 20 முதல் 25 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் அதிக கல்வியறிவு பெற்றவர்கள் மற்றும் வலைத்தளங்கள் மற்றும் வர்த்தக சின்னங்களை உருவாக்க அவர்களின் படைப்பு அறிவைப் பயன்படுத்தலாம். இன்று, பேஸ்புக் அமெரிக்காவில் முக்கிய அந்நிய செலாவணி சம்பாதிக்கும் வணிகங்களில் ஒன்றாகும். இது இணையத்தில் வளர்ந்த ஒரு படைப்பாற்றல் இளம் தொழில்முனைவோர் மாக்ஸ் ஜுக்கர் பெர்க்கால் உருவாக்கப்பட்டது.

அலி பாபா வணிகத்தை ஆன்லைனில் வைத்திருக்கும் சீன தொழிலதிபர் ஜாக் மா, இணையத்தின் மூலம் வெளிவந்த மற்றொரு தொழில்முனைவோர் ஆவார். தொழில்முனைவோரின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் நிறுவனங்கள் டிஜிட்டல் தொழில் நுட்பம் மற்றும் சைபர்ஸ்பேஸ் மூலம் இளம் தொழில்முனைவோர் உருவாக்கும் புதுமைகளுக்கு அறிவுசார் சொத்தின் கீழ் பாதுகாப்பு வழங்க வேண்டும்.

முதல் மற்றும் இரண்டாம் உலகப் போர்கள் போன்ற பூகம்பங்கள், அரசியல் நெருக்கடிகள் போன்ற இயற்கை பேரழிவுகளுக்கு முகங்கொடுக்கும் போது, ஹோண்டா, சோனி மற்றும் குபோடா போன்ற நிறுவனங்கள் சவால்களை முறியடித்து உலகின் மிக முன்னேறிய நிறுவனங்களாக மாறிய வரலாறு நமக்கெல்லாம் படிப்பினைகள்.


அவர்கள் தங்கள் வணிகங்களை புதிய வழிகளில் வழிநடத்தி, ஒரு தொழில்முனைவோருக்கு மிகுந்த அர்ப்பணிப்பு, உறுதிப்பாடு மற்றும் நம்பிக்கை போன்ற குணங்களை உலகுக்கு வெளிப்படுத்தினர். நாமும் இந்த நெருக்கடியை அதே வழியில் சமாளிக்க முடியும். நமக்கு விருப்பமும் அர்ப்பணிப்பும் இருக்க வேண்டும். அதற்கான வாய்ப்புகளை உருவாக்குவது அரசாங்கத்தினதும் சமுக முன்னோடிகளினதும் மற்றும் தலைவர்களினதும் பொறுப்பாகும்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு புதிய தொழிற்புரட்சிக்கு தயாராகவேண்டிய நேரமிது. இதனை உணர்ந்து கைகோர்த்து செயற்பட வேண்டும்.



சி.தணிகசீலன்
வெள்ளிச்சரம்
எழுத்தாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிட்19 புரிதல்கள்,வைரஸ் பரவாமல் தடுப்பதற்கான வழிமுறைகள்,பயம் மற்றும் மன அழுத்தத்திற்கு ஆளாகாமல் இருப்பதை உறுதி செய்தல் போன்ற நோக்குடன் கொவிட்19 பற்றிய புரிதல்களை PAC, கல்முனை நெட் ஊடக வலையமைப்புடன் இணைந்து உருவாக்கியுள்ளது.**

**☎ 077-1717421 என்ற தொலைபேசி இணைப்பில் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம்**




உளவியல் ஆலோசனை மையம் இலங்கை

கல்முனை NET kalmunainet.com




# வீட்டிலிருந்து வெளியே செல்லும் போது முகக்கவசம் அணிய வேண்டியது கட்டாயமாகும்



கல்முனை NET kalmunainet.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org